# பகவத் கீதையின் சாரம்

(ஶ்ரீராதா கிருஷ்ண பக்தியின் ஆரம்பம்)

(Essence of Bhagavad Gita)

**யுக ஆச்சார்யார் நித்ய லீல ப்ரவிஷ்ட ஓம் விஷ்ணு பாத அஷ்டோத்தர**

**ஶ்ரீ ஶ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண கோஸ்வாமி மஹாராஜா**

ஐந்தாம் பதிப்பு
(Version 5.1)
January 10, 2026

**ஶ்ரீ கௌரங்கா ராதா மதன் மோகன் ஆலயம்**
(கொட்டாரம், கன்னியாகுமரி)

**ஒரே இறைவன்!**
ஜாதியில்லை, நிறமில்லை, மதமில்லை

**ஒரே மந்திரம்:**
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

# Copyrights & Acknowledgements

இந்தப் புத்தகத்தை தமிழில் வெளியிட பல பக்தர்களும் பக்தைகளும் துணை செய்துள்ளனர். அவர்களுடைய உதவியே இந்நூல் சிறப்புடன் வெளிவர முக்கியக் காரணமாகும். அவர்களுக்கு எங்கள் அன்பான நன்றி.

**Author:**

**Yuga Acharya Srila Narayana Goswami Maharaja**

Gokul Publications
Gokul Bhavan
2/5 Mission Compound
Kottaram - 629703, Kanyakumari,
Tamil Nadu, South India

**Translation:** Bhagavati Kanti Dasa
**Contact:** bkdasa@gmail.com

**Corrections, Reviews & Questions:**
Radhika Devi Dasi
Krishna Priya Dasi

**Website:** gokulbhajan.com
**Youtube:** youtube.com/c/bkdasa

**Phone:** +91 959 796 9492
+91 750 222 2794
+91 960 066 8797

© Gaudiya Vedanta Publications – Some rights reserved.
Books and Content licensed under CC BY-ND 3.0
Permissions: purebhakti.com/pluslicense | gvp.contactus@gmail.com

# பொருளடக்கம்


முன்னுரை....................................................................4

மூல நூலாசிரியரைப் பற்றி......................................................8

அத்தியாயம் - 1..............................................................9
1.1. எப்பொழுதும் என்னையே நினை..................................9
1.2. பொதுவான உபதேசங்கள்.........................................11
1.3. இரகசிய உபதேசங்கள்.............................................12
1.4. மிக இரகசிய உபதேசங்கள்......................................13
1.5. சிகரமான பரம இரகசியம்..........................................14
1.6. இதயத்தைத் திருடுதல்...............................................17

அத்தியாயம் - 2............................................................23
2.1. என் பக்தனாகு..............................................................23
2.2. ஸ்ரீ பில்வ மங்கள தாக்கூராவின் கதை......................28
2.3. பக்தனை ஸ்ரீகிருஷ்ணர் தாமாகவே கவனிக்கிறார்.....31

அத்தியாயம் - 3............................................................37
3.1. என்னை வழிபடு, எனக்கு வந்தனம் செய்....................37
3.2. பக்தனின் வாக்கைக் காப்பாற்றுகிறார்......................42
3.3. எனக்கு வந்தனம் செய்...............................................44

முடிவுரை....................................................................46

வினாக்கள்..................................................................49

# முன்னுரை

வேத நூல்களிலுள்ள உபநிஷத்துக்களின் சாரமே ஸ்ரீமத் பகவத் கீதை. இது எந்த மதத்தையும் சார்ந்ததல்ல. மாறாக ஜாதி, மதம், நிறம், நாடு, மொழி, கலாச்சாரம் என்ற எந்தவித பாகுபாடுகளுமின்றி அனைத்து ஜீவன்களுக்கும் சொந்தமானது. இது அனைத்து மத நூல்களுக்கும் மேலாக நிற்பதால் பகவத் கீதையைப் படிக்கும் பேரறிவு மேதைகள் அனைவரும் அதை ஓகோவென்று புகழ்கின்றனர். ஏனென்றால் ஸ்ரீமத் பகவத் கீதை பரம இறைவனால் நேரடியாகக் கூறப்பட்ட பரம உண்மைகளைக் கொண்டது.

ஸ்ரீமத் பகவத் கீதையை எத்தனையோ பேர் மொழி பெயர்த்தும், விதம் விதமாக விளக்கவுரைகள் அளித்துமிருக்கின்றனர். பற்பல விளக்கவுரைகள் இன்னும் வந்து கொண்டும் இருக்கின்றன. ஆனால் அத்தனை விளக்கவுரைகளிலும் தங்கள் சொந்த அபிப்பிராயங்களையும் அவர்கள் சேர்த்து விடுகின்றனர். இதுதான் இப்போது உள்ள ஒரு பரிதாபகரமான நிலை. ஸ்ரீகிருஷ்ண பகவான் ஸ்ரீமத் பகவத் கீதையில் கூறுவதற்கும் இவர்கள் கூறும் விளக்கவுரைகளுக்கும் நிறைய முரண்பாடுகள் உள்ளன.

ஸ்ரீமத் பகவத் கீதையில் அவரே பரம இறைவன் என்றும் அவருக்கு மேலாக எவருமேயில்லையென்றும் ஸ்ரீகிருஷ்ணர் நிறைய இடங்களில் கூறுகிறார். எத்தனையோ சாஸ்திரங்கள் இதையேதான் கூறுகின்றன. ஆனால் இந்த உண்மை பலருடைய அறிவுக்கு எட்டவேயில்லை.

ஈஸ்வர பரம கிருஷ்ணா
சச்சிதானந்த விக்ரஹா
அனாதிர் ஆதிர் கோவிந்தா
சர்வ காரண காரணம் ... (பிரம்ம ஸம்கிதா 5.1)

பொருள்: “ஸ்ரீகிருஷ்ணர் மட்டுமே எல்லா கடவுள்களுக்கும் மேலான பரம இறைவன். அவர் சச்சிதானந்த மயமானவர். அவர் மட்டுமே ஆதி முதலானவர். அவரே எல்லாவற்றுக்கும் சர்வ காரணம்.”

மேலும் அவர், பிரம்மம் தன்னிடமிருந்து உண்டானது என்றும் அவர் பிரம்மத்துக்கும் அப்பாலுள்ள 'பர-பிரம்மம்' என்றும் கூறுகிறார். பிரம்மம் ஸ்ரீ கிருஷ்ணரின் தேஜஸ் (அங்க காந்தி), அல்லது பிரம்ம ஜோதி. இந்த உண்மையும் இவர்களது அறிவுக்கு எட்டவில்லை!

ப்ரம்மணோ ஹி ப்ரதிஷ்டாஹம்
அம்ரி தஸ்யா வ்யயஸ்ய ச
ஸாஸ்வதஸ்ய ச தர்மஸ்ய
சுக்கஸ்யைகாந்திக்ஸ்ய ச .. (கீதை 14.27)

பொருள்: "என்னிடமிருந்தே உருவமற்ற நிர்விஷேஷ பிரம்மம் உண்டானது... “

மற்றும் ஸ்ரீமத் பாகவதம் போன்ற அநேக சாஸ்திரங்களில் கூறியிருப்பது போல், பகவத்கீதையிலும் ஸ்ரீகிருஷ்ணர் தன் மகத்தான மகிமைகளை நிறைய இடங்களில் கூறுகிறார்:

அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ
மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே
இதி மத்வா பஜந்தே மாம்
புத்தா பாவ ஸமன் விதா: (பகவத் கீதை 10.8)

பொருள்: “நானே எல்லாவற்றிற்கும் மூலம். எல்லாமே என்னிடமிருந்து மட்டுமே தோன்றுகின்றன. எல்லா கடவுள்களும் எனக்கே பணிவிடை செய்கின்றனர். இதை முழுவதுமாக உணர்ந்த 'புத்திசாலி’, தன் முழு இதயத்தால் 'என்னை மட்டுமே’ வணங்கி சேவை செய்வான்.”

ஆனால் உண்மையில் நடப்பது என்ன? பெரும்பாலான ஜனங்கள் ஸ்ரீகிருஷ்ணரைத் தவிர மற்ற அனைத்துத் தெய்வங்களையும் வணங்குகிறார்கள். எந்த தெய்வத்தை வணங்கினாலும் ஒன்றுதான் என்று அவர்கள் அறிவில்லாமல் பேசுகிறார்கள். அற்ப ஆசைகளால் அவர்கள் உந்தப்பட்டு, இந்தத் தெய்வம் அந்தத் தெய்வம் என்று ஊர் ஊராக அலைகின்றனர், மதம் மதமாக ஓடுகின்றனர். எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் அவை அனத்துமே ஸ்ரீ கிருஷ்ணரின் தயவினால் மட்டுமே அணு கூட இயங்க முடியும் என்பதை அவர்கள் அறியார்கள். இதை நாம் தெளிவாக கீதையிலேயே காண்கிறோம்.

மேலும், ஒருவன் எந்த தெய்வத்தை வணங்கினாலும், அந்த வணக்கங்கள் அனைத்தும் ஸ்ரீகிருஷ்ணரையே போய் சேருகிறது. ஏன்? அவ்வளவு தெய்வங்களும் ஸ்ரீகிருஷ்ணரின் சேவகர்கள். பிற தெய்வங்களை வழிபடத் தேவையேயில்லை (அவிதி) என்று ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார். ஆனால் ஒருவன் ஸ்ரீகிருஷ்ணரை வழிபட விரும்பவில்லையென்றல், அவனது பிறதெய்வ நம்பிக்கையை ஊக்குவித்து, அவன் ஸ்ரீகிருஷ்ணரை அடையாமல், அழியக் கூடிய, நிரந்தரமற்ற தெய்வ லோகங்களை அடைய வைக்கிறார். இவ்வாறு அவர், பாவம் அவனது சுதந்திரத்துக்கு விட்டு விடுகிறார். அவன் எங்கே போய் சேருகிறான்?

யாந்தி தேவா வ்ருத்தான் தேவான்
பித்ர் யாந்தி பித்ர் வ்ரதா:
பூத்தானி யாந்தி பூத்தேஜ்யா
யாந்தி மத் யாஜினோ மாம் (பகவத் கீதை 9.25)

“தேவர்களை வழிபடுபவன் தேவர்களை அடைவான். இறந்த மூதாதையர்களை வழிபடுபவன், அவர்களுடைய (பித்ர) லோகத்தை

அடைவான். பேய் பிசாசுகளை வழிபடுபவன் அந்த பேய் பிசாசுகளிடம் போய் பிறப்பான். ஆனால் என்னை 'மட்டும்' வழி படுபவன் என்னையே அடைவான்."

ஒருவன் ஏன் பிற தெய்வங்களை வழிபடுகிறான் என்பதற்கான காரணத்தையும் அவர் அழகாகக் கீதையில் கூறுகிறார்.

காமைஸ் தைஸ் தைர் ஹ்ருத ஞானா
ப்ரபத்யந்தே அன்ய தேவதா
தம் தம் நியமம் ஆஸ்தாய
ப்ரக்ருத்யா நியதா ஸ்வயா (பகவத் கீதை 7.20)

"எவனுடய புத்தி பௌதீக உலக ஆசைகளினால் திருடப்பட்டுள்ளாதோ, அவன் என்னை வணங்க மாட்டான். மாறாக அவனது அற்ப ஆசைகளத் திருப்தி செய்ய அவன் தேவர்களை விதிமுறைகள் மூலமாக வழிபடுவான். இவ்வாறு தன் அற்ப தன்னல ஆசைகளினால் தூர இழுக்கப்பட்டு என்னையன்றி தேவர்களை வழிபடுகிறான்."

ஸ்ரீமத் பகவத்கீதையின் ஒரு பெரிய மகிமை என்னவென்றால் அதை ஒவ்வொரு முறை படிக்கும்போதும் மேன்மேலும் ஆழ்ந்தக் கருத்துக்கள் கிடைத்துக் கொண்டேயிருக்கும். மற்றும், படிப்பவரின் ஆன்மீக நிலையைப் பொறுத்து அதன் ஆழ்ந்த அர்த்தங்களும், ஆன்மீக உணர்வுகளும் வித்தியாசப்படும். எனவேதான், ஆன்மீகத்தில் மிகவும் பழுத்த அனுபவமுள்ள ஒரு குருவிடம் சரணடைந்து, கீதையில் உண்மையான மறைந்திருக்கும் பரம இரகசியங்களை அவரிடமிருந்து அறிதல் மிக அவசியம். இல்லையென்றால் ஒருவன் எவ்வளவு முயன்றாலும் அவனுக்கு அதன் உண்மையானயான பொருள் புலப்படாது. தகுந்த ஒரு குருவிடம் சரணடையாமலோ, கிருஷ்ண பக்தர்களுக்குச் சேவை செய்யாமலோ பகவத்கீதையை ஒருவன் படித்தால், கீதை கூறும் உண்மையான அறிவை அவன் நிச்சயமாகப் புரிந்து கொள்ளமாட்டான் என்று பகவான் சத்தியம் செய்கிறார்!

ஸ்ரீமத் பகவத் கீதை, சாதாரண மக்களிலிருந்து பரம பக்தன் வரையிலுமுள்ள ஒவ்வொரு நிலைக்கும் உபதேசிக்கிறது. ஆயினும் அதன் சிகரத்தை உண்மையாகவே உணர்ந்து அறிந்தவர்கள் வெகு சிலரே. மற்றவர்கள் தத்தம் ஆன்மீக நிலைகளுக்குத் தக்கவாறு வேறு யோகங்களையும் உபதேசங்களையும் உத்தமம் என்பர். சிலர் பகவத்கீதை கர்ம யோகத்தையே உத்தமமாகக் கொண்டது என்கிறார்கள். இன்னும் சிலர் அது ஞான யோகத்தையே உத்தமமாகக் கொண்டது என்கிறார்கள். ஆனால் ஸ்ரீகிருஷ்ணரின் ரசிக்க பக்தர்களோ பகவத்கீதை பக்தி யோகத்தையே உத்தமமாகக் கொண்டது என்றும், மற்ற அனைத்து யோகங்களும் கிருஷ்ண பக்திக்கு வெறும் அடிக்கற்களே என்றும் கூறுவர். இவை அனைவர்களிலும் யார் சொல்வது உண்மையென்பதை இந்தச் சிறு

புத்தகத்தில் ஸ்ரீல குருதேவரின் விளக்கம் மூலமாகக் காணுங்கள்.

இந்தச் சிறு தமிழாக்கம் எங்கள் பரம குருவான ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண கோஸ்வாமி மகாராஜா அளித்த "The Essence of Bhagavad Gita" என்ற புத்தகத்தை மூலமாகக் கொண்டது.

இந்த கிடைத்தற்கரிய பணியினை எங்களுக்கு அளித்த குருதேவருக்கும், பக்தர்களுக்கும் பக்தைகளுக்கும் அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, இதை எங்கள் குருதேவருக்கே அவரது மலர்ப் பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்.

செப்டம்பர் 4, 2022<br>ஸ்ரீ ராதாஷ்டமி

பகவதி காந்தி தாஸா<br>சியாமலி தேவி தாஸி

# மூல நூலாசிரியரைப் பற்றி

ஶ்ரீ ஶ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண கோஸ்வாமி மகாராஜா உலக ஜீவன்களின் மேல் கருணை கொண்டு இந்தியாவில் புனித கங்கை நதியோரமுள்ள தேவாரிப்பூர் என்ற கிராமத்தில் 1921-ஆம் ஆண்டு தோன்றினார்.

கிருஷ்ண பக்தர்களால் குருதேவர் என்று அன்புடன் அழைக்கப்படும் ஶ்ரீநாராயண மகாராஜா, ஶ்ரீகிருஷ்ணரிடம் தொடங்கி வழிவழியாக வரும் குரு பரம்பரையைச் சேர்ந்தவர். ஆன்மீகத்தில் மிகவும் உயர்ந்த ஞான நிலையை அடைந்து அதன் உண்மைகளை நேரடியாக உணர்ந்தவர். ஶ்ரீல பக்தி பிரக்ஞான கேசவ மகாராஜாவிடம் குரு தீட்சை பெற்று, பின் கிருஷ்ண பக்தியை உலகம் முழுவதும் பரப்பிப் பெருமை பெற்ற அ.ச.பக்தி வேதாந்த பிரபுபாதாவைச் சிக்ஷ குருவாகப் பெற்றவர்.

அனைத்து வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள் மற்றும் அனைத்து ஆன்மீக சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்று முப்பதுக்கும் மேற்பட்ட பக்தி நூல்களும், வியாக்கியானங்களும் ஹிந்தியில் எழுதி, அவை அனைத்தும் ஆங்கிலத்திலும் மற்றும் பற்பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.

உலகெங்கிலும் உள்ள மக்கள் அனைவருக்கும் ஜாதி, மத வேறுபாடின்றி ஶ்ரீமத் நாராயண மகாராஜா அடைக்கலம் கொடுத்தார். அவரது சுயநலமற்ற, உண்மையான அன்பும், ஆதரவும் உன்னதமான ஆன்மீக சேவையும் இந்த உலகின் அனைத்து மக்களையும் ஈர்க்கின்றன. ஏராளமான பக்தி சேவாலயங்களையும், பக்தித் தொண்டு நிறுவனங்களையும் நடத்தியதுடன் உலகெங்கும் சென்று பக்தர்களின் தேவைகளைக் கனிவுடன் கவனித்தார். சுமார் 30 முறைகள் உலகத்தை வலம் வந்தவர்.

# அத்தியாயம் - 1

## 1.1. எப்பொழுதும் என்னையே நினை

வேத நூல்கள் பல உன்னதமான புண்ணிய தலங்களைப் பற்றி விவரிக்கின்றன. ஆனால் அவை எல்லாவற்றிலும், பிருந்தாவனத்திற்கு நிகரான புண்ணிய தலம் இந்த அண்ட சராசரத்தில் வேறு எதுவும் கிடையாது. இந்த உண்மையை, பிருந்தாவனத்தின் மகிமையைப் பற்றி அறிந்தவர்கள், குறிப்பாகப் பிருந்தாவனத்தின் மாபெரும் கருணையைப் பெற்றவர்கள் நன்கு அறிவார்கள். அங்கே ஸ்ரீ கிருஷ்ணரும் அவரது சகாக்களும் நடத்திய லீலைகள் மிக மிக அற்புதமானவை! அந்த அற்புதமான லீலைகளை எப்போதும் மனதில் தியானித்தும், ஆழ்ந்து சிந்தனை செய்தும், பின்னர் முழுவதுமாக அவைகளில் மூழ்கித் திளைத்தும், ஸ்ரீகிருஷ்ணருக்கும் அவரது சகாக்களுக்கும் பரஸ்பர சேவை செய்யும் மனப்பாங்கைப் பெறுவதே முழுமையான ஆன்மீக வாழ்க்கையாகும்.

இந்த மனப்பாங்கையும் லீலைகளையும் பற்றி ஸ்ரீமத் பாகவதத்தில் விவரமாக எழுதப்பட்டுள்ளது. ஸ்ரீமத் பாகவதம் ஒரு உத்தமமான ஆன்மீக சாஸ்திரம். ஆனால் இதைப் புரிந்து கொள்ள ஸ்ரீமத் பகவத்கீதையை முதலில் நன்றாக அறிந்திருக்க வேண்டும். கீதையின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுதான் பன்னிரெண்டு மாடி (12 காண்டங்கள்) யுள்ள ஸ்ரீமத் பாகவதம் என்னும் மாபெரும் அரண்மனை கட்டப்பட்டுள்ளது. கீதையின் அடிப்படைத் தத்துவங்கள் புரியாதவரை ஸ்ரீமத் பாகவதத்தின் உண்மையான ஆன்மீகத் தத்துவங்களைப் புரிந்து கொள்ள இயலாது. அவர்களுக்கு வெறும் ஜட உலகம் சார்ந்த அர்த்தங்களைக் கொடுத்து எல்லாவற்றையும் கெடுத்து விடும். குறிப்பாக இது மிக மிக இரகசியமான ஆன்மீக விஷயங்கள் அடங்கிய சாஸ்திரமாகும்.

ஸ்ரீமத் பகவத்கீதையில் (18.65) கீழ்க்கண்ட ஸ்லோகம் வருகிறது.

**மன் மனா பவ மத் பக்தோ**
**மத் யாஜி மாம் நமஸ்குரு**
**மாம் ஏவைஸ்யஸி சத்யம் தே**
**ப்ரதி ஜானே ப்ரியோஸிமே**

"உன்னுடைய மனம், இதயம் முழுவதையும் என்னிடமே கொடுத்து, என் பக்தன் ஆகி, என்னை வணங்கி வந்தனம் செய்தால் நீ கண்டிப்பாக என்னிடமே வருவாய். நீ எனக்கு மிகவும் பிரியமானதால் இந்த வாக்குறுதியை உனக்கு நான் அளிக்கிறேன்."

இந்த சுலோகம் கீதையிலுள்ள மற்ற எல்லா சுலோகங்களை விடவும் சிறந்தது. இதற்கு அடுத்து வரும் இன்னொரு முக்கியமான சுலோகத்தை (18.66) விடவும் இது சிறந்தது. சுலோகம் 18.66 இல் ஸ்ரீகிருஷ்ணர், "ஸர்வ தர்மான் பரித்யஜ்ய" என்கிறார். அதாவது, "நீ எல்லாவிதமான மார்க்கங்களையும் விட்டுவிட்டு என்னை மட்டுமே அடைக்கலமாகக் கொள். நான் உன்னை எல்லா விதமான பாவ விளைவுகளிலிருந்தும் விடுவிக்கிறேன், பயப்படாதே" என்று உபதேசிக்கிறார்.

"மன் மனா பவ" சுலோகம், மேற்கூறிய சுலோகத்தை விடவும் சிறந்தது. "ஸர்வ தர்மான் பரித்யஜ்ய" என்ற சுலோகம் ஆன்மீக அடைக்கலத்தைப் பற்றி உபதேசிக்கிறது. ஆனால் "மன் மனா பவ" சுலோகமோ அந்த அடைக்கலத்தினால் கிடைக்கும் பிரதிபலனைக் குறிப்பிடுகிறது. எனவே இந்த சுலோகம் மிக மிக உன்னதமானதாகிறது.

பகவத்கீதையை நுணுக்கமாகப் படித்து அறிந்தவர்கள், குறிப்பாக நம் பரம்பரையிலுள்ள புகழ் வாய்ந்த ஆச்சாரியார்களின் உரைகளைப் படித்தால், அதில் ஐந்து படிநிலைகளில் ஸ்ரீகிருஷ்ணர் உபதேசித்திருப்பது நன்கு விளங்கும். முதல் படிநிலையில் ஸ்ரீகிருஷ்ணர் சாதாரண மக்களுக்காகப் பொதுவான உபதேசங்களை அளிக்கிறார். அதன்பின் இரண்டாவது படிநிலையில் சில ரகசியமான அறிவைப் போதிக்கிறார். மூன்றாவது படிநிலையில் மேலும் அதிகமான இரகசிய அறிவைப் போதிக்கிறார். அதிலும் மிக உயர்ந்த இரகசிய உபதேசங்கள் நான்காவது படிநிலையில் வருகின்றன. ஆனால் ஐந்தாவது படிநிலையிலோ, எல்லா இரகசியங்களிலும் உயர்ந்த பரம

இரகசியத்தை வழங்குகிறார். இவற்றை இனி விரிவாகப் பார்ப்போம்.

## 1.2. *பொதுவான உபதேசங்கள்*

சாதாரண மக்களுக்கும், ஆன்மீகத்தில் கீழ் நிலையில் இருப்பவர்களுக்கும் மேல்வாரியாக மட்டுமே ஸ்ரீகிருஷ்ணர் பின்வருமாறு உபதேசிக்கிறார். "அளவுக்கு மிஞ்சி உண்ணாதே. அளவுக்கு மிஞ்சித் தூங்காதே. உன் வேலை, கேளிக்கை, ஓய்வு அனைத்தையும் ஒழுங்குக்கும், கட்டுப்பாட்டுக்கும் கொண்டு வா. இல்லாவிட்டால் உன்னைப் படைத்த இறைவனை அடைவதற்காகப் பின்பற்ற வேண்டிய அரிய யோக சாதனத்தைச் செய்ய இயலாமல், நீ இறைவனை அடையும் சந்தர்ப்பத்தை இழந்து விடுவாய்" (பகவத் கீதை 6.17) என்று போதிக்கிறார். இது ஒரு பொது அறிவுரை தான்.

மேலும் ஸ்ரீ கிருஷ்ணர் உபதேசிக்கிறார்: "இந்த உடல் சம்பந்தமான ஆசைகளுக்காக நாம் செயலாற்றக் கூடாது. மாறாக அவைகளிலிருந்து நம்மை நாம் விடுவித்துக் கொள்ள வேண்டும். பிறவி எடுத்த ஒவ்வொருவரும் இறப்பது நிச்சயம். அதன்பின் திரும்பவும் பிறப்பதும் நிச்சயம்" (பகவத்கீதை 2.27). இவை அனைத்தும் பொதுவான உபதேசங்களேயாகும்.

அர்ஜுனன் எல்லோருக்காகவும் அழுதான். ஆம், தன் மைந்தன், மனைவி, சுற்றத்தார்கள், நண்பர்கள் என எல்லோருக்காகவும் அழுதான். நாமும் இதே போல் தான் அழுகிறோம். ஸ்ரீகிருஷ்ணர் அறிவுறுத்துகிறார்: "விவேகமுள்ள எவனும், இருப்பவர்களுக்காகவோ இறந்தவர்களுக்காகவோ கவலைப்பட மாட்டான்" (பகவத்கீதை 2.11)

எல்லோருக்கும் இறப்பு என்பது நிச்சயம். இன்று இல்லையென்றால் நாளை, அல்லது மற்றொரு நாள் இறப்பு வருவது நிச்சயம். நாம் அவர்களுக்காக அழுவதோ, கவலைப்படுவதோ சரியல்ல. ஏனென்றால் ஒவ்வொரு உடம்பிற்குள்ளும் இருப்பது ஆன்மா. "ஆன்மாவை ஆயுதங்களால் தீங்கு செய்ய முடியாது; தீயால் எரிக்க முடியாது; நீரால் நனைக்க முடியாது; காற்றால் உலர்த்த முடியாது. ஆன்மா நிரந்தரமானது. ஆனால் இந்த உடம்போ அழியக்கூடியது. எனவே இந்த உடம்பைப் பற்றித் தேவையின்றி கவலைப்படாதே" (பகவத் கீதை 2.23) என்று கூறுகிறார்.

இனி இந்த உடம்பை எப்படி அனுசரிக்க வேண்டும் என்பதையும் பகவான் கூறுகிறார். இந்த உடல் பகவான் கொடுத்தது. இதை அவரது கோயிலாக நினைத்து, அதை அனுசரிப்பதும் அவசியம். உடலைச் சரியாகக் கவனித்தால் தான் அதைக்கொண்டு நாம் அவருக்கு உகந்த சேவை செய்ய இயலும். எனவே அதைப்

பரிசுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் நாம் பகவானுக்குச் சேவை செய்ய முடியாது. இவ்வாறாக, நமது உடலை ஆன்மீக நோக்கத்துடனும் அதே சமயம் நம் ஆன்மாவை உடலிலிருந்து பிரித்த மனப்பான்மையுடனும் அனுசரிக்க வேண்டும்.

பகவான் இந்த உடலைத் திருப்பிக் கேட்கும் போது அதைத் திருப்பிக் கொடுத்தேயாக வேண்டும். அப்போது பகவான் கேட்பார், "நான் இந்த அபூர்வமான, மிகவும் உயர்ந்த மனித உடம்பை உனக்குக் கொடுத்தேன். நீ அதை எப்படி உபயோகப்படுத்தினாய்?" இதற்குப் பதில், நாம் உண்மையிலேயே எதற்காக அதை உபயோகப்படுத்தினோம் என்பதில் உள்ளது. எனவேதான் ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார், "சாதாரண ஜனங்கள் தூங்கும்போது, விவேகி ஆன்மீக சாதனங்களுக்காக விழித்திருப்பான். ஆனால் விவேகி தூங்கும் போது சாதாரண ஜனங்கள் இந்திரிய சுகங்களை அனுபவிக்க விழித்திருப்பார்கள்." (பகவத்கீதை 2.69)

நாம், பகவானுக்குச் சேவை செய்வதை மட்டுமே முக்கியக் கடமையாகக் கொள்ள வேண்டும். மேலும் அன்றாடச் செயல்களை அனுசரித்து, இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகக் கொள்ள வேண்டும்.

இவ்வாறாக, ஸ்ரீகிருஷ்ண பகவான் பாமர மக்களுக்காகப் பொதுவான உபதேசங்களை முதல் படிநிலையில் உபதேசிக்கிறார். இனி, இரண்டாம் படிநிலையில் எவ்வாறு இரகசியமான அறிவுரைகளை உபதேசிக்கிறார் என்பதைப் பார்ப்போம்.

## 1.3. *இரகசிய உபதேசங்கள்*

இரண்டாம் படிநிலையில் இரகசிய உபதேசங்கள் வருகின்றன. இவை குறிப்பாகப் பிரம்ம ஞானத்தைப் பற்றியவை. பிரம்மம் என்பது ஒரு ஆன்மீக வஸ்து. ஒவ்வொரு ஜீவாத்மாவும் பிரம்ம வஸ்துவே. இதே போல் பரமாத்மாவும் ஒரு ஜீவ வஸ்துதான். அர்ஜுனன் கேட்கிறான், "ஆன்மீக உணர்வு (பிரம்ம ஞானம்) பெற்று பிரம்மத்தில் மூழ்கியிருக்கும் மனிதனின் அடையாளம் என்ன? அவன் எவ்வாறு பேசுவான், எப்படி இருப்பான், எப்படி நடப்பான்?" (பகவத் கீதை 2.54)

இந்தக் கேள்விக்கு பகவான் கீதையில் பதினெட்டாவது அத்தியாயத்தில் பதிலளிக்கிறார். "பிரம்மத்தில் மூழ்கியிருப்பவன் எங்கும் பிரம்மத்தையே காண்கிறான். தானும் அந்த பிரம்மம் என்று உணர்கிறான். இந்த எண்ணத்தில் அவன் பிரம்மத்தில் தியானம் செய்து, இன்ப துன்ப அனுபவங்களுக்கு அப்பால் இருப்பான். எந்த

நிலையிலும் அவன் உறுதியுடன் இருப்பான். பின்னர் அவன் தனது ஆத்ம உணர்வைப் பிரம்மத்தில் சேர்க்கிறான்" (பகவத்கீதை 18.54)

மேலும், இந்த இரகசிய உபதேசப் படிநிலையில் தான் பகவான், "நீ உன் கடமைகளைச் செய், ஆனால் அதன் பலனை எதிர்பார்க்காதே" என்றும் உபதேசிக்கிறார் (பகவத்கீதை 2.47). இவை அனைத்தும் பிரம்ம ஞானத்தைச் சார்ந்தவையே.

இனி, இதைவிட உயர்ந்த, அடுத்தப் படிநிலையான மிகவும் இரகசியமான உபதேசங்கள் என்னவென்று பார்ப்போம்.

## 1.4. *மிக இரகசிய உபதேசங்கள்*

மூன்றாவதாக வருபவை அனைத்தும் பரமாத்மாவைப் பற்றியுள்ள ஞான உபதேசங்கள். உயிர் வாழும் ஜீவன்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று தவறு செய்பவை, இன்னொன்று தவறு செய்யாதவை. இந்தப் பூவுலகையும் சேர்த்து, அனைத்துப் பூத உலகங்களில் வாழும் உயிர்கள் அனைத்துமே தவறு செய்யக்கூடியவை. ஆனால் ஆன்மீக உலகங்களில் வாழும் உயிர்கள் தவறு செய்யாதவை. இவை இரண்டுக்கும் மேல் இருப்பது பரமாத்மா. பகவானின் ஒரு சொரூபமான இந்தப் பரமாத்மா ஒவ்வொரு ஜீவராசியின் இதயத்திலும் கைப் பெருவிரல் அளவில் சூட்சுமமாக இருக்கிறார். அந்தப் பரமாத்மாவைத் தியானம் செய்து அவரை எவ்வாறு அடையலாம் என்பதைப் பற்றிய விஷயங்களையே இந்த அடுத்தப் படிநிலையில் ஸ்ரீகிருஷ்ணர் உபதேசிக்கிறார். "நீ பரமாத்மாவை சிரத்தையுடன் தியானம் செய். உன்னால் அடைய முடியவில்லை என்றால் இன்னமும் தொடர்ந்து முயற்சி செய்" என்று அவர் போதிக்கிறார். பகவான் மேலும் கூறுகிறார், "நான் முன்பு கூறிய உருவமில்லாத பிரம்மத்துக்குப் போகாதே. எச்சரிக்கையாய் இரு. உனது தியானத்தினால் உருவமில்லாத பிரம்மத்தில் ஈடுபடுவது மிகமிகக் கடினம். அதற்குப் பதிலாக இதயத்தில் இருக்கும் பரமாத்மாவை நீ தியானம் செய்" (பகவத் கீதை 12.5) என்கிறார்.

மேலும், பரமாத்மாவுடன் தொடர்பு கொண்டிருப்பவனைப் பற்றிப் பகவான் கூறுகிறார், "பரமாத்மாவிடம் தொடர்பு கொண்டிருப்பவன் உண்மையிலேயே துறந்த வாழ்க்கை வாழ்பவன். அவன் ஒரு உண்மையான யோகி, உண்மையானத் துறவி. ஆனால் அவனது கடமைகளைத் தவிர்க்கவும் மாட்டான். அதே போல், 'நான் பிரம்மம்' என்று கூறவும் மாட்டான்."

இவை அனைத்தும் மிக இரகசியமான உபதேசங்கள். ஸ்ரீ கிருஷ்ணர் இவ்வாறாக ஒன்றன்பின் ஒன்றாகக் கடைசியில் எல்லா இரகசியங்களிலும் உயர்ந்த பரம இரகசியங்களைப் போதிக்கிறார்.

# 1.5. *சிகரமான பரம இரகசியம்*

ஸ்ரீமத் பகவத்கீதையின் ஒன்பதாவது அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ள உன்னதமான இரகசியங்களுக்கு, "குக்யதம்" என்று பெயர். இவை, பரிசுத்தமான ஆன்மீக பக்தியுடன் செய்யும் சேவைகளைப் பற்றி விவரிப்பவை. ஆனால் இவற்றில் பக்தி ரசம் கிடையாது. எல்லா இரகசியங்களிலும் உயர்ந்த பரம இரகசியம் பதினெட்டாம் அத்தியாயத்தின் கடைசியில்தான் கொடுக்கப்பட்டுள்ளது. இது பக்தியின் சிகரமாகவும், முழுக்கவும் பக்தி ரசமாகவும் சுடர் விடுகிறது. "நீ எனக்கு மிகவும் பிரியமானதால், நான் உனக்கு இந்த எல்லா உபதேசத்திலும் மேலாக மறைந்திருக்கும் பரம இரகசியத்தைக் கூறுகிறேன்" (பகவத் கீதை 18.64) என்று பகவான் அதைப் பின்னர் தான் உபதேசிக்கிறார்.

அந்த இரகசியமான உபதேசம்தான் என்ன?

"உன் மனதையும், இதயத்தையும் என்னிடம் கொடு. என் பக்தனாகி என்னை வழிபடு. எனக்கு வந்தனம் செய். அப்படியானால் நீ கண்டிப்பாக என்னிடம் வந்து சேருவாய். நான் இதைச் சத்தியம் செய்கிறேன். ஏனென்றால் நீ எனக்கு மிகவும் பிரியமானவன்" (பகவத் கீதை 18.65) என்று கூறுகிறார்.

பகவத்கீதையில் இதுவரையிலும் கிருஷ்ண பகவான் தன்னை அவரது மாட்சிமை பொருந்திய ஐஸ்வரிய மனப்பாங்கான பக்தியுடன் வழிபடுவதைக் கூறியிருக்கிறார். இது அவரை ஸ்ரீமன் நாராயணராக வழிபடும் விதமே யாகும். ஆனால் இந்த சுலோகத்தில் நான்கு அசாதாரணமான பக்திச் செயல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மிகவும் கவனமாகக் கேளுங்கள்.

முதலாவது: "மன் மனா பவ" - என்னை எப்போதும் நினை. இரண்டாவது: "மத் பக்தோ" - என் பக்தனாயிரு, மூன்றாவது: "மத் யாஜி" - என்னை வழிபடு. நான்காவது: "மாம் நமஸ்குரு" - எனக்கு வந்தனம் செய். நீ முதலாவதைச் செய்ய இயலாவிட்டால் இரண்டாவதைச் செய். இரண்டாவதையும் செய்ய முடியவில்லை என்றால் மூன்றாவதைச் செய். அதையும் உன்னால் செய்ய இயலவில்லை என்றால் எனக்கு நீ வந்தனம் செய். அதிலிருந்து மற்ற எல்லாம் தானாக வந்து விடும்.

இனி இந்த ஸ்லோகத்தின் முதலாவது பாகத்தைப் பார்ப்போம். "மன் மனா பவ": "உன் மனதையும் இதயத்தையும் என்னிடமே எப்போதும் வை." இது ஒரு சாதாரண செயல் அல்ல. நாம் நம்மை ஒரு செயலில் முழுவதுமாக ஈடுபடுத்த வேண்டுமானால், நம் கண், காது, மூக்கு மற்றும் எல்லாப் புலன்களையும் முழுமையாக ஈடுபடுத்துவது

அவசியம். நம் மனதை முழுமையாக ஒன்றில் ஈடுபடுத்த முடியவில்லை என்றால் அந்த மனம் கட்டு மீறிய மனமேயாகும். சில சமயங்களில் நம் மனம் இந்திரிய சுக நாட்டங்களில் ஈடுபடுகிறது. மற்ற சில சமயங்களில் மட்டும் பகவானிடம் ஈடுபடுகிறது. இந்திரிய வேட்கையில் மனம் செல்லுவது நம் பரிசுத்தமில்லாத நிலையையேக் காட்டுகிறது. எப்போதும் அந்த ஸ்ரீ கிருஷ்ணரின் தாமரைப் பாதங்களில் மனதை முழுவதுமாக நிறுத்தி வழிபடுது தான் எல்லா வழிபாட்டிலும் உத்தமமானது. ஆனால் இது எப்பொழுது சாத்தியமாகும்?

ஆன்மீக பக்தி வழியில் பல படிநிலைகள் உள்ளன. ஒரு பக்தன் முதல் படிநிலையான "சிரத்தை" (நம்பிக்கை) என்ற நிலையில் இருக்கும் போது அவனால் மனதை முழுவதுமாக ஸ்ரீ கிருஷ்ணரிடம் செலுத்த இயலாது. கேவலம், இரண்டாவது படிநிலையான "ரசிப்பு" (ருசி) என்ற நிலையில் கூட இது சாத்தியமாகாது. இந்த நிலையை பக்தன் அடைந்த பின் மட்டுமே மெதுவாக மனம் ஸ்ரீ கிருஷ்ணரிடம் செல்லும். இதன் பின்னர் வரும் "அசக்தி" (ஆன்மீகப் பிடிப்பு) என்ற நிலையில் ஒருவேளை நம் இதயத்தில் பாதியை கிருஷ்ணரிடம் கொடுப்போம். இதன் பின்னால் வரும் "பாவா" என்ற பேரின்பப் பூரிப்பு நிலையினால் ஒருவேளை நம் இதயத்தில் முக்கால் பங்கை கிருஷ்ணரிடம் கொடுப்போம். இவை அனைத்து நிலைகளுக்கும் அப்பால் வரும் "பிரேமை" என்ற முழுவதும் சுத்தமான ஆன்மீக அன்பு நிலையில் மட்டுமே கிருஷ்ணரிடம் நம் முழு மனதையும் இதயத்தையும் கொடுக்க இயலும். (இதற்கும் மேலான பக்தி நிலைகளை இந்த மானிட உடம்பால் தாங்கவோ அனுசரிக்கவோ இயலாது.)

ஸ்ரீகிருஷ்ணரிடம் முழு மனதையும், முழு இதயத்தையும் கொடுப்பதில் பிருந்தாவனத்துக் கோபியர்கள் ஒரு சரியான உதாரணம் காட்டினார்கள். அவர்கள் கிருஷ்ணரின் மிகவும் உயர்ந்த பக்தைகள். அவர்களின் பக்திக்கு ஈடு இணை செய்ய எவராலும் இயலாது. அவர்களுக்கு கிருஷ்ணர் மட்டுமே உயிர். அவரைத் தவிர வேறு எதுவுமே அவர்களுக்குத் தெரியாது.

ஸ்ரீகிருஷ்ணர் பிருந்தாவனத்தை விட்டுச் சென்ற பின்னர், தன்னைப் பிரிந்த துயரம் தாங்க முடியாமல் அல்லல்படும் கோபியர்களுக்கு ஆறுதல் கூற அவரது மிக நெருங்கிய நண்பனும் பிரதம மந்திரியுமான "உத்தவா" என்பவரை அனுப்பும் போது இவ்வாறு கூறுகிறார்: "நீ பிருந்தாவனத்தை அடைந்ததும் கோபியர்களைச் சந்திப்பாய். அவர்கள் எனக்கு மிகவும் பிரியமானவர்கள். அவர்கள் தங்கள் இதயங்களை முழுவதுமாக எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். என்னைத் தவிர அவர்களுக்கு வேறு எதுவுமே தெரியாது. எனக்காக அவர்கள் தங்கள் உடம்பையும் மறந்து அதன் அன்றாடத் தேவைகளைக் கூடக் கவனிக்காமல் இருக்கிறார்கள்."

மேலும் ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார்: "ஒருவன் தன் உடம்பையே மறந்து விட்டால் அவனது நிலை என்னவாகும்? அவர்கள் உண்பது, குடிப்பது, குளிப்பது, ஆபரணங்கள் அணிவது, தலைமுடியைச் சரியாக வைப்பது இப்படி அனைத்தையுமே மறந்து விட்டனர். அவர்கள் நிச்சயமாக எலும்பும் சதையும் ஒன்றாகி பவவீனமாகத்தான் இருப்பார்கள். என்னிடமுள்ள அளவு கடந்த அன்பினால் அவர்கள் தங்கள் உடம்பைக் கவனிப்பதை அறவே மறந்து விட்டனர். மேலும், தம் கணவர், மக்கள், அண்ணன் தம்பிகள், நண்பர்கள், செல்வம், நிலம் அனைத்தையும் துறந்து விட்டனர். என்னைத் தவிர அவர்களுக்கு அன்பு காட்ட வேறெவருமே கிடையாது. இரவும் பகலும் என்னையே தங்கள் இதயத்தில் ஒரு கணமும் விடாமல் நினைத்துக் கொண்டேயிருக்கிறார்கள். "உத்தவா, இவ்வுலகில் ஒருவர் இதயத்தை முழுவதுமாக இன்னொருவருக்குக் கொடுத்திருக்கும் உதாரணத்தை நீ வேறு எங்குமே பார்த்திருக்க மாட்டாய். இந்தக் கோபியர்கள் தங்கள் உயிர்களை எப்படியோ பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பிராணன் கழுத்துக்கு வந்து விட்டது. எவ்வளவு நாட்கள் இப்படி அவர்களால் வாழ முடியும்? இந்த நிலையில் அவர்களைக் காப்பாற்ற முடியுமா என்பதே எனக்குச் சந்தேகம்!" என்று ஸ்ரீகிருஷ்ணர் கூறினார்.

மேலும் அவர் உத்தவாவிடம் "நீ உடனே சென்று அவர்களின் உயிரைக் காப்பாற்று. "நான் நிச்சயமாக நாளையோ அல்லது மறுநாளோ கண்டிப்பாக வருவேன்" என்று அவர்களிடம் சொல். நான் எப்படியாவது ஒரு நாள் அங்குத் திரும்ப வருவேன் என்ற ஒரே நம்பிக்கையில் தான் தத்தம் உயிர்களை விடாமல் பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள். 'கிருஷ்ணர் திரும்பி வருவேன் என்று கூறியிருக்கிறார். அவர் பொய் சொல்லமாட்டார்' என்ற நம்பிக்கையில் உயிரை விடாமல் இருக்கிறார்கள். இந்த ஒரு சிறு நம்பிக்கைதான் ஒரு மரக்கிளை போல் அவர்களது உயிர்களைப் பிடித்து நிறுத்தியுள்ளது. இந்த மரக்கிளை முறிந்தால் அவர்கள் கீழே விழுந்து விடுவார்கள் - உயிரை விட்டு விடுவார்கள். எனவே நீ உடனே செல்" என்று கூறினார்.

மனதையும், இதயத்தையும் கிருஷ்ணருக்காக முழுவதுமாக அர்ப்பணிப்பதற்கு கோபியர்கள் மட்டுமேத் தகுந்த உதாரணம். இதையொட்டி இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நாம் அறிந்திருக்க வேண்டும். நம்மால் நம் இதயத்தை வலுக்கட்டாயமாகக் கொடுப்பது கடினம் தான். ஆனால் அதே சமயத்தில் அவரே நம் இதயத்தைப் பறித்துக் கொண்டால் இது சுலபமான வேலையாகி விடும். நாம் எதையும் நாமாகத் தள்ளுவதை விட இன்னொருவர் அதை இழுத்தால் அது நமக்குச் சுலபம்! கதா உபநிஷத்தில் (1.2.25) ஒரு ஸ்லோகம் வருகிறது. "எந்த இதயம் கிருஷ்ணருக்குப் பிரியமாக உள்ளதோ, அதை அவர் தெரிந்து கொண்டு, 'நீ என்னிடம் வா, உன் இதயத்தை நான் பறித்துக் கொள்வேன்' என்கிறார்" என்று வருகிறது.

நாம் நமது இதயத்தை உண்மையிலேயேக் கொடுக்க ஆசைப்பட்டாலும், அது ஒரு கடினமான காரியமே. அதே சமயம் கிருஷ்ணர் விருப்பப்பட்டு எடுக்க வந்தால் அது சாத்தியமாகும். ஆனால் நம் இதயம் கிருஷ்ணரை ஈர்க்கும் அளவுக்கு அதை வசீகரமாக வைத்திருக்க வேண்டும். அப்படி நமது இதயத்தை வைத்திருந்தால் நம்மைக் கிருஷ்ணர் பார்க்கும் போது அவருக்கு அதன் கவர்ச்சியினால் பேராசை உண்டாகும். மிகவும் சுத்தமான இதயம் மட்டுமே கிருஷ்ணரை ஈர்க்குமாதலால், அதைப் பரிசுத்தமாக வைத்திருப்பது மிகவும் அவசியம். இல்லாவிடில் அவர் அதை ஏற்க மாட்டார். மேலும், சுத்தமாக வைத்திருப்பது மட்டும் போதாது. எத்தனையோ மகா மகா ஞானிகள் தங்கள் இதயங்களை மிகவும் சுத்தமாக வைத்துள்ளனர். ஆனால் அவர்களது இதயங்கள் கிருஷ்ணரை ஈர்க்கவில்லை! ஏன்?

ஸ்ரீகிருஷ்ணரை நம் இதயம் ஈர்க்க வேண்டுமானால் அதற்கு சுத்தம் மட்டுமல்ல - விசேஷமான நறுமணமும் தேவை! நறுமணம் இருந்தால் தான் அது அவரது மூக்கைத் தொடும். நம் இதயத்தில், கிருஷ்ணருக்குப் பரஸ்பர சேவை செய்யும் மனப்பாங்குடன், பக்தி ரசம் ஊற்றெடுத்து வழிய வேண்டும். பிருந்தாவனத்துக் கோபியர்களின் இதயங்களில் இந்தப் பக்தி ரசம் பொங்கி நிறைந்திருந்த காரணத்தினால் தான் அவர்கள் கிருஷ்ணருக்கு மிகமிகப் பிரியமானவர்களாக இருந்தார்கள்.

## 1.6. *இதயத்தைத் திருடுதல்*

இனி ஸ்ரீகிருஷ்ணர் தனக்குப் பிடித்தமான இதயங்களை எப்படி திருடுகிறார் என்பதைப் பார்ப்போம்.

ஒரு நாள் வழக்கம் போல் கிருஷ்ணர் பசுக்களை மேய்ப்பதற்காக பிருந்தாவனக் காட்டில் சென்று கொண்டிருக்கிறார். அவரது கார்மேக வண்ண மேனியும், முகத்தை வருடும் அடர்ந்த சுருண்ட கேசமும் அவரது அழகைக் கொள்ளை கொண்டு மிகைப்படுத்திக் காட்டின. அவரது சக நண்பர்கள் புடைசூழ நாலா பக்கமும் பரவி, "மிக நன்று" , "மிக நன்று" என்று கூவிக் கொண்டும் கிருஷ்ணரைப் புகழ்ந்து கொண்டும் தத்தம் புல்லாங்குழல்களையும் கொம்புகளையும் ஊதிப் பாடியும் ஆடியும் திருவிழா ஊர்வலம் போல் சென்று கொண்டிருந்தனர்.

இவ்வாறு அவர்கள் வழக்கம் போல் செல்லும் போது, கண் தெரியாதவர்கள் கூட வீடுகளிலிருந்து வெளியே வந்து பார்க்க வருவார்கள்! "நீ எங்கே போகிறாய்?" என்று ஒருவர் கேட்பார். "நான் கிருஷ்ணரின் தரிசனத்துக்காகச் செல்கிறேன். என் கைகளைப் பிடித்துக் கொள். நாம் எல்லோரும் போவோம்" என்று மற்றவர் கூறுவார். இவ்வாறு, அடக்கமுடியாத ஆவலுடன் அவர்கள் கிருஷ்ணரின் தரிசனத்துக்காகச் செல்வார்கள்.

பிருந்தாவனத்திலுள்ள அனைத்து ஜனங்களும் சாலை ஓரங்களில் கூடி, கிருஷ்ணர் மாடு மேய்க்கப் போகும் காட்சியைப் பார்த்துப் பேரானந்தம் அடைவார்கள். தாய் யசோதாவும் நந்த மகாராஜாவும் கிருஷ்ணரின் பின்னாலேயே வெகு தூரம் வந்து, "மகனே, சீக்கிரமாகத் திரும்பி வந்து விடு. தொலைவில் போகாதே" என்று கூறுவார்கள். ஒவ்வொரு நாளும் கிருஷ்ணர் அவர்களிடம், தான் சீக்கிரமாக வந்து விடுவதாக உறுதி அளித்தாலும், கடைசியில், தான் கண்டிப்பாக சீக்கிரம் திரும்பி வருவேன் என்று உறுதியின் மேல் உறுதியளித்த பின்னர் தான் யசோதாவும் நந்த மகாராஜாவும் மெதுவாக வீட்டை நோக்கி நடப்பார்கள். இது தினமும் நடக்கும் ஒரு அற்புதமான நாடகம்!

பிருந்தாவனத்தில் புதிதாகத் திருமணமான பல இளம்பெண்கள் கணவன் வீட்டில் வாழ்வதற்காக வந்திருந்தனர். அவர்கள் தத்தம் வீடுகளிலுள்ள கதவு, ஜன்னல்கள் வழியாகக் கண்ணை வைத்து ஸ்ரீ கிருஷ்ணரின் சொற்ப நேர தரிசனத்துக்காகக் காத்துக் கிடப்பார்கள். சிலர் தங்கள் வீடுகளிலுள்ள துவாரங்கள் வழியாகவும், சிலர் வீட்டுக் கூரைகளிலும், மற்றும் சிலர் மரக்கிளைகளிலும் ஏறிக் கிருஷ்ணரைப் பார்க்க முயல்வர்.

ஸ்ரீகிருஷ்ணர் குறிப்பாக புதிதாக வந்துள்ள பெண்களைத் தேடுவார். கோடிக்கணக்கான வருடங்கள் தவம் செய்த புண்ணியத்தினால் கிடைக்கும் அரிய வாய்ப்பு தான் இவ்வாறு பிருந்தாவனத்தில் வந்து வாழ்வது! ஒரு வீட்டில் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக புதிதாகத் திருமணமான ஒரு இளம் பெண் இருந்தாள். கிருஷ்ணர் மாடு மேய்க்கச் செல்லும் கொள்ளை அழகினை மற்றவர்கள் மூலம் அவள் அறிந்திருந்தாள். பிருந்தாவனத்தின் முக்கிய வீதி வழியாக அன்று கிருஷ்ணர் மாடு மேய்க்க வருவதை அறிந்து, அவளது இதயம் கிருஷ்ணரைத் தரிசிக்க வேண்டி அவரது வருகைக்காக அடக்க முடியாத ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தது.

ஆனால் அவளுடைய நாத்தனாரும் (கணவனின் தங்கை) மாமியாரும் வாசலுக்கு வெளியே உட்கார்ந்திருந்தனர். அவளது நாத்தனாரோ மிகப் பொல்லாதவள். அவர்கள் இருவரும், "நீ போக முடியாது, அங்கே கரு நாகப் பாம்பு (கிருஷ்ணர்) ஒன்று வரும், அது கடித்து விட்டால், அதன் விஷத்தை ஒருபோதும் வெளியே எடுக்க முடியாது, அதனால் நீ வீட்டிலேயே இரு. நாங்கள் சென்று விட்டு சீக்கிரம் வந்து விடுவோம்" என்று கூறி அந்த இளம் பெண்ணைத் தடுத்து விட்டார்கள்.

"நீங்கள் எல்லோரும் போகும் போது நான் மட்டும் ஏன் வீட்டில் தனியாக இருக்க வேண்டும், நானும் வருவேன்" என்று அந்த இளம் பெண் கூறினாள். அதற்கு, "நீ கண்டிப்பாக வராதே. அது மிகவும் ஆபத்து. உன் இதயம் மிக இலேசானது. நீ இங்கேயே உட்கார்" என்று அவர்கள் கூற, அந்த இளம் பெண்ணோ தான் மட்டும் தனியேயாவது செல்வதாகக் கூறி அரற்றினாள்.

"எல்லாப் பெண்களும், வயதானவர்களும், சிறுவர் சிறுமிகள், பறவைகள், மிருகங்கள் கேவலம் பிருந்தாவனத்தின் சிறு ஜந்துக்கள் கூட கிருஷ்ணரின் தரிசனத்துக்காகச் செல்கின்றன. எனக்கு மட்டும் ஏன் அவரது தரிசனம் கிடைக்கக் கூடாது? அவசியம் நான் போவேன்," என்றாள்.

"இல்லை, நீ போகவே கூடாது" எனக் கூறியும் "நீங்கள் என்னை வீட்டை விட்டு வெளியேற்றினாலும் கூட நான் போவேன்!" என்று அந்த இளம்பெண் அடம்பிடித்தாள்.

இந்தச் சமயத்தில் கிருஷ்ணர் வருவதைத் தூரத்தில் கண்டதும், அவளது மாமியாரும் நாத்தனாரும் வேகமாகப் பார்க்க ஓடினார்கள். அவர்கள் சென்றதும், அந்த இளம் பெண் கதவிலுள்ள ஒரு துவாரம் வழியாக உற்றுப் பார்த்தாள். அந்த துவாரம் வழியாக அவள் வெளியே பார்க்கலாமே தவிர, வெளியேயிருந்து யாரும் அவளைப் பார்க்க இயலாது.

அப்போது, ஸ்ரீ கிருஷ்ணர் புல்லாங்குழலைத் தனது பவள வாயில் வைத்து எழுப்பிய அற்புதமான வேய்ங்குழல் கானம், அவரது இதயத்திலிருந்து அமிர்தமாகக் கிளம்பி எல்லாத் திசைகளிலும் பரவி, பிருந்தாவனம் முழுவதையும் பரவசமாக்கிக் கொண்டிருந்தது. அந்தக் காட்சியைக் காணாத கண்களைத் தீயில் தான் வீசி எறிய வேண்டும்! விவரிக்கவொண்ணாத அந்தக் காட்சியைப் பார்த்த கண்கள் கொடுத்து வைத்தவையே!

ஸ்ரீகிருஷ்ணர் தன் இச்சையுடன் ஒருவரைப் பார்க்கவோ, பார்க்காமல் இருக்கவோ செய்வார். ஆனால் ஒருவர் கிருஷ்ணரைப் பார்க்க வேண்டும் என்று ஆசையால் துடித்துக் கொண்டிருந்தால் அவர் கண்டிப்பாகப் பார்ப்பார். அன்று அவ்வாறு துடித்துக் கொண்டிருந்த அந்த இளம் பெண்ணிற்கு முதன் முதலில் தரிசனம் கொடுக்க விழைந்தார். மற்ற எல்லோரையும் விட்டு விட்டு வேகமாக அந்த இளம்பெண்ணின் முன் போய் நிற்க ஒரு லீலையைச் செய்தார். அவர் எவருக்கும் தெரியாமல் ஒரு சிறு பசுங்கன்றின் வாலைப் பிடித்துக் கொண்டு, அதை ஒரு முறைத் திருகி முறுக்கி விட்டார்! அது துள்ளிக் குதித்துக் கொண்டு, அவரையும் சேர்த்து இழுத்துக் கொண்டு முன்பே சொல்லி வைத்தது போல் அந்த இளம் பெண்ணின் வீட்டின் முன் போய் நின்றது!

இப்போது ஸ்ரீகிருஷ்ணர் கன்றுடன் கதவின் முன் நின்றார். புல்லாங்குழலை நயனமுடன் வாயில் வைத்து அவருக்கே உண்டான புன்முறுவல் பூத்த முகத்துடனும் திரிபங்க (மூன்று இடங்களில் கோணிய) வடிவுடன் கொள்ளை கொள்ளும் அழகுடனும் நின்றவாறு அந்த இளம் பெண்ணுக்கு சில கணங்கள் தரிசனம் கொடுத்தார்! அவர் வேலை முடிந்தது. அவளது இதயத்தை அப்படியேத் திருடிக் கொண்டு, எதுவுமே நடக்காதது போல் ஸ்ரீகிருஷ்ணர் தன் வழியே

சென்றுவிட்டார்! இதயத்தைப் பறிகொடுத்த அந்த இளம்பெண்ணோ எதுவும் செய்ய இயலாமல் அசையாத பொம்மை போல் நின்று கொண்டிருந்தாள். இது தான் இதயத்தைக் கபளீகரம் செய்வது - "மன் மனா பவ"!

ஸ்ரீ கிருஷ்ணருடைய கருணை யாருக்குக் கிடைக்கிறதோ, அவருடைய இதயத்தை அவர் நிச்சயமாக பறித்து எடுத்துக் கொண்டு விடுவார்! "நான் எப்போது கிருஷ்ணரின் அழகு சொரூபத்தைக் காண்பேன்" என்று எவர் ஒருவர் உண்மையிலேயே ஆவல் கொண்டிருப்பாரோ, அவரது இதயத்தை ஸ்ரீகிருஷ்ணர் மனமகிழ்ந்து திருடிக் கொள்வார்! அந்த இளம் பெண், கோடிக்கணக்கான வருடங்கள் தவம் செய்ததின் முழுப் பலனை, இன்று கிடைக்கப் பெற்றாள்.

இதயத்தைப் பறி கொடுத்த அவள், சுமார் இருபது நிமிடங்களுக்கும் மேலாகக் கற்சிலை போல் ஸ்தம்பித்து நின்றிருந்தாள். கிருஷ்ணரோ காட்டுக்குள்ளே சென்று, பசுக்களும் அவரது சகாக்களும் கிளப்பிய புழுதி தரையில் அடங்கி வெகு நேரமாகி விட்டது. ஆனால் அந்த இளம் பெண்ணோ இதயத்தைப் பறிகொடுத்து விட்டு ஒன்றுமே செய்ய இயலாமல் அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

அப்போது அவளது பொல்லாத நாத்தனாரும் மாமியாரும் வந்து விட்டனர். அவளைப் பார்த்ததும் என்ன நடந்திருக்கும் என யூகித்து, "அந்த கரு நாகப் பாம்பான சியாமசுந்தரன் உன்னைக் கடித்தே விட்டார்! இனி உன்னால் அந்த நஞ்சை வெளியில் எடுக்கவே முடியாது" என்று நாத்தனார் கத்தினாள்.

இருவரும் சேர்ந்து அவளை உலுக்கி ஒருவாறு சுய நினைவுக்குக் கொண்டு வந்து, "ஏ, இங்கே பார். அதோ, அந்தத் தயிர்ப் பானையையும் மத்தையும் எடுத்துக் கொண்டு வந்து இந்தத் தயிரைக் கடை. இப்படிக் கடின வேலை செய்தால் தான் உன் மனநிலை திரும்பவும் இயல்பு நிலைக்கு வரும்" என்று நாத்தனார் கூறினாள்.

ஆனால் அந்த இளம் பெண்ணோ, தவறுதலாக, கடுகு வைத்திருந்த ஒரு பானையை எடுத்து வந்து அதைக் கடைந்தாள். அது பலத்தச் சத்தத்தை எழுப்பியது. சற்று நேரம் கடைவாள், பின் அப்படியே நிற்பாள். அவளது மனமும் இதயமும் எங்கேயிருந்தன? அதைத் தான் ஸ்ரீ கிருஷ்ணர் எடுத்துக் கொண்டு போய் விட்டாரே! "மன் மனா பவ"! இதயத்தைப் பறி கொடுத்த அவள் என்னதான் செய்வாள்?

திரும்பவும் அவளது நாத்தனார் வந்து, "அடியே, நீ என்ன செய்கிறாய்? நான் என் அம்மாவிடம் போய் இதைச் சொல்லி விடுவேன்!" என்று கூறி முடிக்கும் முன் மாமியார் வந்து நின்றாள். இளம் பெண்ணின் செயலைக் கண்டு, "அடியே, நீ ஏன் இப்படிப் பேய் பிடித்தவள் போல் உட்கார்ந்திருக்கிறாய்? அந்தப் பாத்திரத்தை வெளியே தூக்கி வை. நீ போய் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு வா" என்று

கட்டளையிட்டாள்.

ஒரு பெரிய தண்ணீர்ப் பானையை அவளது தலையில் வைத்து, அதன் மேல் இன்னொரு சிறிய பானையையும் வைத்து (இதை இப்போதும் பிருந்தாவனத்தில் நாம் காணலாம்), கையில் ஒரு சிறு குழந்தையையும் கொடுத்து, "இந்தக் குழந்தையைக் கவனித்துக் கொள், அதை அழாமல் பார்த்துக் கொள்வது உன் பொறுப்பு" என்று கூறி கையில் ஒரு நீளமான கயிறையும் கொடுத்து அனுப்பினாள்.

கயிற்றில் பானையைக் கட்டி கிணற்றில் இறக்கி தண்ணீர் முகர்வது அங்கு வழக்கம். கிணற்றை அடைந்ததும் அந்தக் கயிற்றைப் பானையில் கட்டுவதற்காக முடிந்தாள். ஆனால் அதைப் பானையின் கழுத்தில் கட்டுவதற்குப் பதிலாக மெய்மறந்து அந்தக் குழந்தையின் கழுத்தில் கட்டி, பானைக்குப் பதிலாக அந்தக் குழந்தையைக் கிணற்றினுள் இறக்க ஆரம்பித்தாள்! நல்ல வேளையாக பக்கத்திலிருந்தவர்கள் இதைக் கண்டு, "ஏ, நீ என்ன செய்கிறாய்?" என்று கேட்டு ஓடோடி வந்தனர்.

அவர்கள் அந்தப் பெண்ணிடமிருந்து கயிற்றைப் பிடுங்கி, குழந்தையைக் காப்பாற்றி விட்டனர். உடனே பக்கத்தில் நின்ற ஒரு கோபி ஏளனமாக, "இதோ பாருங்கள்! இவளை ஏதோ ஒரு பேயோ பிசாசோ பிடித்துள்ளது" என்றாள். அதற்கு இன்னொரு கோபி "இது சாதாரணப் பேய் இல்லையடி, அந்த நந்த குமாரப் பேய்!" எனக் கிண்டலாகக் கூறினாள்.

எவரொருவருக்கு தன் இதயத்தைத் தன் குழந்தைகளுக்கோ சுற்றத்தார்களுக்கோ கொடுக்க விருப்பமில்லாமல் அதைக் கிருஷ்ணருக்கு மட்டுமே கொடுக்க விருப்பம் உள்ளதோ, அவர்களுக்குப் பிருந்தாவனம் தான் சரியான இடம். அவர்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு அங்கே கிருஷ்ணரை மட்டும் தேடி அடைக்கலமாக வருவார்கள். பெரிய பெரிய மன்னர்களும் கூட எல்லாவற்றையும் விட்டு விட்டு அங்கே வந்து தத்தம் இதயங்களை கிருஷ்ணரிடம் பறிகொடுத்து விட்டு அவருக்கு சேவை செய்வதில் ஈடுபட்டு விடுவார்கள்!

ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனிடம் கூறுகிறார், "இது 'மன் மனா பவ.'" அந்தக் கோபியர்கள் தங்கள் மனத்தையும் இதயத்தையும் என்னிடம் முழுமையாகக் கொடுத்தது போல், நீயும் செய்ய வேண்டும் என்கிறார்.

அதற்கு அர்ஜுனனோ, "பிரபோ, இது போர்க்களம். இங்கு என்னால் எப்படி என் இதயத்தைக் கோபியர்கள் கொடுத்தது போல் கொடுக்க முடியும்? மேலும் என்னை என் தாத்தாவான பீஷ்மர், குருவான துரோணாச்சார்யர் மற்றும் கர்ணன் எல்லோருக்கும் எதிராகப் போர் புரியவும் சொல்கிறீர். நீங்கள் கூறும் உபதேசத்தை என்னால் எப்படிக் கடைப்பிடிக்க முடியும்!" என்று கேட்கிறான்.

அதற்கு ஸ்ரீகிருஷ்ணர், "உன்னால் 'மன் மனா பவ' செய்ய முடியவில்லை என்றால், 'மத் பக்தோ' - அதாவது 'என் பக்தனாகு'!" என்று அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார்.

# அத்தியாயம் - 2

## 2.1. *என் பக்தனாகு*

முந்தைய அத்தியாயத்தில் நாம் பகவத்கீதையின் மிகவும் இரகசியமான சுலோகத்தையும் அதன் ஆழ்ந்த அர்த்தங்களையும் பார்த்தோம்: "மன் மனா பவ" - உன் மனதை எப்போதும் என்னிடமே வைத்திரு என்பதற்குக் கோபியர்கள் மிகச் சரியான உதாரணம் என்றும் பார்த்தோம்.

ஸ்ரீகிருஷ்ணர் இந்த உபதேசத்தைப் போர்க்களத்தின் நடுவில் வைத்து அர்ஜுனனுக்குக் கூறுகிறார். அதே போல் நாமும் போர்க்களத்தின் நடுவில் தான் நிற்கிறோம். குருசேத்திரத்தில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே போர் நடந்தது. அதே போல் நமக்கும், இயற்கையாகவே நிலையற்று ஓடும் நம் மனத்திற்கும் இடையே எப்போதும் போர் நடக்கிறது. அர்ஜுனனுக்கு கிருஷ்ணரை எப்போதும் மனதில் நினைப்பது (மன் மனா பவ) எவ்வளவு கடினமாக இருந்ததோ, அதே போல் நமக்கும் கடினமாக உள்ளது.

பாண்டவர்களின் சேனை வெறும் ஏழு பிரிவுகள் (அக்ஷௌகினிஸ்) கொண்டவை. ஆனால் கௌரவர்களுக்கோ பதினோரு பிரிவுகள் இருந்தன. அதே சமயம் நாமோ எந்த விதமான பக்கபலமுமின்றி தனியே போர் செய்கிறோம்! அர்ஜுனனுக்குக் கிருஷ்ண பரமாத்மா தேர் ஓட்டினார். நமக்கு நம் துஷ்ட புத்தி தான் தேர் ஓட்டி! அர்ஜுனனுக்கு, அக்னி பகவான் கொடுத்த அழிக்கவோ எரிக்கவோ முடியாத தேர் இருந்தது. நமக்கு எந்த விதமான தேர் உள்ளது? நோய் மற்றும் சாக்காடு பிடிக்கும் வெறும் பூத உடம்பே நம்மிடம் உள்ளது. அர்ஜுனனிடம் காண்டீபம் (வில்) இருந்தது. நம்மிடம் அது மாதிரி போர் புரிய ஆயுதம் எதுவுமே கிடையாது.

மேலும் அர்ஜுனனின் தேர்க்கொடியில் யார் உட்கார்ந்திருந்தார்? அனுமான் அல்லவோ இருந்தார்! நமக்கு அம்மாதிரி யார் இருக்கிறார்? இதுதான் நமது பரிதாபகரமான நிலை!

இவ்வளவும் அர்ஜுனனுக்கு இருந்த போதிலும், ஸ்ரீகிருஷ்ணர் மேற்கண்ட உபதேசத்தை அளித்த போது அர்ஜுனனின் மனம் கலங்கியது, "பிரபோ, என்னால் என் மனதை எப்போதும் உம்மிடம் மட்டுமாக வைத்திருக்க முடியவில்லையே" என்றான்.

அர்ஜுனனுக்கே இந்த நிலை என்றால் நாம் மட்டும் எம்மாத்திரம்? நம்

உயிரைப் பயணியாகக் கொண்டு, நம் மனமென்ற தேரோட்டி உடலென்ற தேரை ஓட்டுகிறான். ஆனால் நம் மனத்தின் இயற்கையான சுபாவம் என்ன? அது எப்போதுமே அலை பாய்ந்து கொண்டிருக்கிறது. நமக்கு எந்த உதவியையும் அது அளிப்பதில்லை. அதை நாம் பின்பற்றினால் கண்டிப்பாக வீழ்ந்து விடுவோம், அல்லது தவறான பாதையில் போய் விடுவோம்!

இதே அர்ஜுனன் சற்று முன்னர்தான் (பகவத் கீதையின் முதல் பாகத்தில்) ஸ்ரீகிருஷ்ணரிடம், கூப்பியக் கரங்களுடன், "நான் முழுமையாக எல்லா வகையிலும் உம்மிடம் சரணடைகிறேன். நீர் என்னை என்ன செய்யச் சொல்கிறீரோ அதையே கண்டிப்பாகச் செய்வேன்" (பகவத் கீதை 2.7) என்று சரணாகதி அடைந்தான். ஆனால் இப்போதோ எல்லா உபதேசங்களையும் கிருஷ்ண பகவானிடமிருந்து கேட்ட பின்னரும், "என்னால் 'மன் மனா பவ' எப்படி முடியும்" என்று கேட்கிறான். "என்னை எதிர்த்து பீஷ்மர், துரோணாச்சார்யார், கர்ணன், துரியோதனன், துர்ச்சாதனன் அனைவரும் நிற்கின்றனர். எண்ணிலடங்கா மகா வீரர்கள் இங்கு போர் புரியக் குவிந்துள்ளனர். இந்த நிலையில் என் மனத்தை எப்படி உம்மிடம் முழுவதுமாகக் கொடுக்க முடியும்?" என்கிறான் அர்ஜுனன்.

நமக்குள்ளும் ஆறு எதிரிகள் நம்மை எதிர்த்து நிற்கின்றனர்:

1. நாவடக்கமின்மை (பேசத் துடிப்பு)
2. நாக்கின் ருசி ஏக்கம்
3. வயிறு (பெருந்தீனி)
4. புணர் இந்திரிய நாட்டம் (சிற்றின்ப ஆசை)
5. அலைபாயும் மனம்
6. கோபம்

இவற்றில் ஒன்றைக் கூட நம்மால் வெல்வது கடினம். மிகப் பெரிய ரிஷிகளான விஸ்வாமித்திரர், நாரதர் கூட சிற்றின்ப நாட்டத்தில் மாட்டிக் கொண்டார்கள். நாரதர் ஒரு ராஜகுமாரியை மணங்கொள்ள ஆசைப்பட்டு, விஷ்ணு கொடுத்த குரங்கு முகத்தைப் பெற்றதால் அந்த ராஜகுமாரியை அடைய முடியாமல் போன செய்தியை இராமாயணம் கூறுகிறது.

இந்த ஆறு எதிரிகள் ஒருபுறம் இருக்கட்டும், மறுபுறத்தில் எண்ணிலடங்கா பாவச் செயல்களைச் செய்யத் தூண்டும் அற்ப மனித ஆசைகளையும், இதயத்தில் இருக்கும் வேண்டாத அழுக்குகளையும் எப்போது நம்மால் போரிட்டுக் களைய முடியும்? அதனால் தான் கிருஷ்ணர் அடுத்து கூறுகிறார், "மத் பக்தா" - நீ என் பக்தனாகி விடு" என்று.

அர்ஜுனன் சிந்தனை செய்து சொல்கிறான்: "நான் பக்தனாகி விடுகிறேன் என்று ஒருவன் எளிதாகக் கூறி விடலாம். ஆனால் உண்மையிலேயே பக்தனாவது என்பது மிக மிகக் கடினம்".

"பக்தன்" ஆவதென்பது சுலபமான ஒன்றல்ல! சுத்தமான பக்தி என்பது என்ன? "எந்த விதமான சுய நலமும் இன்றி, அறிவு, செல்வாக்கு, பொருளீட்டல்களில் அறவே ஆசையின்றி, ஸ்ரீகிருஷ்ணரை மகிழ்விப்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செய்யும் தொண்டு மட்டுமே சுத்தமான பக்தி என்பதாகும்" என்று ஸ்ரீல ரூபகோஸ்வாமி கூறுகிறார். அதாவது இவ்வுலகப் பொருள்கள் எதன் மீதும் சிறிது கூட ஒரு கிருஷ்ண பக்தனுக்கு ஆசை இருக்கக் கூடாது. மேலும், ஸ்ரீகிருஷ்ணருக்கும் அவரது பக்தர்களுக்கும் சேவை செய்வதைத் தவிர வேறு எந்த ஆசையும் அவனது இதயத்தில் இருக்கக்கூடாது! சொல்லப் போனால், "ஆசை" என்ற நினைப்பே மனதில் வரக்கூடாது. இதைக் கவனமாகப் புரிந்து கொண்டு செயல்பட்டால் மட்டுமே ஒருவன் உண்மையான பக்தனாகலாம். அப்போது தான் பக்தியின் உண்மையான அர்த்தமே புரியும்.

மேல் குறிப்பிட்டவை நமக்கு முரண்பாடாகத் தெரியலாம். நாம் உலகம் சம்பந்தமான, மற்றும் அறிவைப் பெருக்குதல் சம்பந்தமான செயல்களைக் கூட விட்டு விட வேண்டும் என்று பார்த்தோம். இது நடைமுறையில் எவ்வாறு சாத்தியமாகும்? செயல் புரியாமல் எந்த ஜீவாத்மாவாலும் இருக்க முடியாது. மேலும், நம்மைப் பாதுகாக்க, உணவு உண்பதும், துணி மணிகள் அணிவதும், மற்றுமுள்ள அன்றாடப் பணிகளைச் செய்வதும் அத்தியாவசியமே. இன்னும் சொல்லப்போனால் நாம் தூங்கும் போது கூட, சுவாசிப்பது, புரண்டு படுப்பது, கனவு காண்பது போன்ற உலக சம்பந்தமான செயல்களைச் செய்கிறோம். குறிப்பாகச் சில செயல்களைச் செய்யாமல் உயிரோடு இருக்கவே முடியாது. யாராவது தன்னால் அப்படியும் இருக்க முடியும் என்று கூறினால் அது வெறும் நடிப்பாகத் தான் இருக்க முடியும்.

இப்போது நம் கேள்வி இதுதான், "நம் அன்றாடச் செயல்கள் நமது பக்தியை பாதிக்காமல் எப்படி இருக்க வேண்டும்?" இதற்கு விடை என்னவென்றால், "இந்த எல்லா விதமான செயல்களையும் நீ கிருஷ்ணருக்காக மட்டுமே செய்". அவ்வாறு செய்தால் நம்முடைய எந்தச் செயலுமே பக்தியைப் பாதிக்காது. உதாரணமாக, நாம் உண்ணும் போதும் பகவானை மறக்கக் கூடாது. பதிலாக, அவருக்காகவும் அவருக்கு சேவை செய்வதற்காகவும் உண்ண வேண்டும்.

இதே போல், அறிவு சம்பந்தமான விஷயங்களை நாம் அறவே விட்டுவிட்டு வாழவும் முடியாது. அறிவும் தேவையே. இல்லாவிடில் நாம் நடக்கும் போது கூட, உரிய உணர்வின்றி காலை எடுத்து வைத்தால் கீழே தான் விழுவோம்.

அறிவு, உடல் சம்பந்தமான செயல்களை பக்திக்கு உதவுகின்ற வகையில் மட்டுமே உபயோகிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவை பக்தியை மூடி மறைத்து விடும். அறிவு, பொருள் மற்றும் அனைத்துச்

செயல்களையும் கிருஷ்ணருக்கு மட்டுமே நாம் செய்ய வேண்டும். உதாரணமாக, நாம் சந்தைக்குப் போகிறோம். அங்கே நல்ல பழங்களையும் காய்கறிகளையும் தெரிந்து வாங்கி, நன்றாகச் சமைத்து கிருஷ்ணருக்குப் படைக்கிறோம். அவர் அதை ஏற்றுக் கொண்டு மகா பிரசாதமாக்கிக் கொடுக்கிறார். பின்னர் அந்த மகா பிரசாதத்தை நாம் உண்கிறோம். இவ்வாறு நம் செயல்களை அர்ப்பணிக்கும் போது அவை பக்தியை மென்மேலும் வளர்க்குமேயன்றி மறைக்காது.

நாம் நமது எல்லாச் செயல்களின் பலனையும் ஸ்ரீகிருஷ்ணருக்கே சமர்ப்பித்தாலும், அதனை நமது சந்தோஷத்திற்காகச் செய்யும் போது எல்லாமே கெட்டு விடுகிறது! இவை உண்மையான பக்தியை மூடி மறைத்து விடுகின்றன. எனவே நாம் இதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். உதாரணமாக நாம் மிகவும் உயர் தரமான பால், நெய், தேங்காய் மற்றும் அனைத்து நயமான பொருட்களுடன் மிகவும் உயர்ந்த ருசியான ஒரு பண்டத்தைச் செய்து அதன் மேல் வெள்ளிப் பொதிகையும் போட்டு, அதைக் கிருஷ்ண பகவானுக்கு நிவேதனம் செய்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை நிவேதனம் செய்யும் போது, "நானே தேவையான பணத்தைச் சேர்த்து, பல நயமான பொருட்களை வாங்கி இதை நன்றாக, பக்குவமாகச் செய்தேன். இனி இதை பகவானுக்குப் படைத்து விட்டு அதன் பின் இதை ருசித்து உண்பேன்" என்று நினைத்து அர்ச்சனை செய்வது சரி போல் தோன்றினாலும், உண்மையில் இது சரியல்ல. ஒருவர் பல விதமான பண்டங்களைச் செய்து அதன் "பின்னர்" பகவானுக்கு அர்ப்பணிப்பதை விட, முதலிலேயே அவருக்கான எல்லாச் செயல்களையும் கிருஷ்ணருக்கு அர்ப்பணித்து விட வேண்டும். "உனது செயல் எல்லாவற்றையும் எனக்கு அர்ப்பணமாகக் கொடு" என்று பகவத் கீதையில் அவர் கூறுகிறார் (பகவத்கீதை 3.9).

பகவத்கீதையின் உபதேசம் இது தான், "நீ என்னென்ன உண்ணுகிறாயோ, என்னவெல்லாம் செய்கிறாயோ, என்னென்ன கொடுக்கிறாயோ, என்னென்ன தியாகம் செய்கிறாயோ, எல்லாவற்றையும் எனக்கே அர்ப்பணமாகச் செய்." (பகவத் கீதை 9.27). உதாரணமாக, நீ தோட்டம் வைத்திருக்கிறாயா? அதை அப்படியே கிருஷ்ணருக்கு மட்டுமே கொடுத்து விடு! இந்த உலகத்தில் ஆன்மீகத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் மேலே குறிப்பிட்டவாறு எல்லாவற்றையும் கிருஷ்ணருக்கு அர்ப்பணம் செய்து விடுகின்றனர்.

ஆனால் ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவும் அவர் வழியில் வந்த பெரிய ஆச்சாரியார்களோ, "நீ அப்படிச் செய்யாதே! மிகவும் ஜாக்கிரதை! இவ்விதமாக அர்ப்பணம் செய்தால் நீ சிக்கலில் மாட்டிக் கொள்வாய்!" என்று கண்டிப்புடன் உபதேசம் செய்தார்கள். பதிலாக அவர்கள், "நான் உன்னுடையவன் என்று கூறி 'உன்னையே' நீ அர்ப்பணம் செய்து விடு!" என்ற அறிவுரையே சிறந்தது. இதற்கு 'ஆத்ம நிவேதனம்' என்று பெயர். இப்படிச் செய்தால், நாம் உண்பது

முதல் எல்லாச் செயல்களுமே தானாகவே பகவானுக்குப் போய்விடும்! இது மிக மிக உத்தமமான வழி.

"ஸ்ரீகிருஷ்ண நாமங்களையும் லீலைகளையும் கேட்பது, அவரது நாமங்களை ஜெபிப்பது, அவரை எப்போதும் நினைப்பது, அவரது திருவடிகளை சேவிப்பது, அவரை எப்போதும் வழிபடுவது, அவருக்கு வந்தனம் செய்வது, அவரது சேவகனாக செயல்படுவது, அவருக்குப் பிரியமான தோழன் ஆவது, தன்னை முழுவதுமாக அவரிடமே ஒப்படைத்து சரணடைவது - இவை பக்தியின் ஒன்பது வகையான அம்சங்களாகும். இதுவே எல்லா விதமான அறிவுகளிலும் உச்சமான அறிவாகும்." (ஸ்ரீமத் பாகவதம் 7.5.23-24)

ஆனால் மேலே குறிப்பிடப்பட்ட ஒன்பது அம்சங்களையும் நிறைவேற்றிய "பின்னர்" அதை பகவானுக்கு அர்ப்பணித்தால் அது கலப்படமான பக்தியாகி விடும். இவ்வுலகிலுள்ள சாதாரண ஜனங்களோ "செயல்களை நாம் செய்ய வேண்டும். அதன் பலனை பகவானிடம் அர்ப்பணித்து விட வேண்டும்" என்ற பொதுவான அறிவை மட்டுமே கொண்டுள்ளனர். கர்ம யோகமே உத்தமம் என்று அதைக் கடைப்பிடிப்பவர்கள் இதையே இறைபக்தி எனவும் நினைக்கிறார்கள். ஆனால் உண்மையான பக்தனோ, "தன்னையே" ஸ்ரீ கிருஷ்ணருக்கு அர்ப்பணம் செய்து விடுகிறான்! இதில் உள்ள பெரும் வித்தியாசத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஒரு சிறுவன் தன் தந்தையின் மடியில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் தான் சாப்பிடும் உணவில் சிறிதைத் தன் வாயிலும், சிறிதைத் தன் தந்தையின் வாயிலும் திணித்துக் கொண்டிருக்கிறான். இந்தச் செய்கைகளால் அவன் தந்தை சிறிதளவு கூடக் கோபப்பட மாட்டார். மாறாக அது அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியையே அளிக்கிறது. ஏன்? அந்தச் சிறுவன் முழுவதுமாக தந்தையைச் சார்ந்திருக்கிறான். தந்தை அந்தச் சிறுவனைத் தண்டித்தாலும் கூட, அவன் ஒரு போதும் தன் தந்தையை விட்டுச் செல்ல மாட்டான். உத்தமமான பக்தனும் இவ்வாறே. அவன் எப்போதும் பகவானிடம் பரஸ்பரம் நெருங்கிய தொடர்புடன் இருப்பான்.

ஆனால் இப்படி ஒரு நெருங்கிய பிணைப்பு கிருஷ்ணரிடம் நமக்கு வர வேண்டுமானால் முதலில் நம்மை நாம் ஒரு தகுந்த குருவிடம் முழுவதுமாக ஒப்படைக்க வேண்டும். மேலும், நாம் இருக்கும் தற்போதைய நிலையில் குருவை பகவானுக்குச் சமமாகக் கருத வேண்டும்.

இப்படி நாம் பகவானிடம் நேரடியாக உறவு கொள்ளும் போது அவரை விதிமுறைக்கேற்ப சேவை செய்யத் தேவையில்லை. பிருந்தாவனக் கோபியர்கள் தங்களை அப்படியே அர்ப்பணித்து, ஸ்ரீ கிருஷ்ணரிடம் மிக நெருங்கிய உறவு கொண்டவர்கள். அவர்கள் தங்களை நன்றாக அலங்கரிக்கின்றார்கள், உண்கிறார்கள். ஆனால்

அவர்கள் கிருஷ்ணருக்கு முறையான வழிபாடோ, அர்ச்சனைகளோ செய்வதில்லை! ஏன்? அவர்கள் தங்களை அலங்காரம் செய்ய மிக மிக அழகான ஆடைகளையும் ஆபரணங்களையும் உபயோகித்தார்கள். ஆனால் அவை எல்லாம் யாருக்காக? அவர்கள் என்னவென்ன செய்தாலும் அவை யாவுமே அந்த கிருஷ்ணருக்காக மட்டுமே! அவர்களிடம் இருக்கும் எல்லாப் பொருட்களும் வழக்கம் போல் ஸ்ரீ கிருஷ்ணருக்குத் தான் போகும்! காரணம் அவர்கள் "தங்களையே" முழுவதுமாக கிருஷ்ணருக்கு அர்ப்பணம் பண்ணிக் கொடுத்து விட்டார்கள். இதுவே 'ஆத்ம நிவேதனம்' என்பது.

நாமும் அவர்களை உதாரணமாகக் கொண்டு நம்மை முழுவதுமாக கிருஷ்ணருக்கே அர்ப்பணிக்க வேண்டும். இந்த விதமான பக்தி உண்டாவது மிக மிக அரிது. முன் ஜென்மங்களில் நாம் நிறையப் புண்ணியங்கள் செய்திருந்தால் ஒருவேளை இது கிடைக்கலாம். மற்றபடி, பகவானின் கருணையாலோ, அல்லது அவருடைய சுத்த பக்தனுடைய கருணையாலோ அது கிடைக்கலாம். குறிப்பாக இந்தப் பிறவியில் சுத்த பக்தனுடைய தொடர்பு ஏதேனும் கிடைக்கப் பெற்றால் அது சாத்தியமாகும். ஸ்ரீ பில்வ மங்கள தாக்கூரா என்ற உத்தம பக்தரின் கதையிலிருந்து இது புலனாகும்.

## 2.2. *ஸ்ரீ பில்வ மங்கள தாக்கூராவின் கதை*

பில்வ மங்கள தாக்கூராவுக்கு முன்பிறவிகளில் செய்த புண்ணியங்கள் நிறைய இருந்திருந்தாலும், அவரது இதயத்தில், "நான் சந்தோஷமாக இருக்க வேண்டும்" என்ற ஒரு ஆசை மட்டும் எப்போதும் இருந்தது. இதன் விளைவாக அவருக்குச் சிந்தாமணி என்ற ஒரு விலைமாதிடம் மிக நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவளது இனிமையான பக்தி கீர்த்தனைகளுக்கு முதலில் ஈர்க்கப்பட்டு பின்னர் அவளையே தஞ்சம் என்று விழுந்து விட்டார்.

ஓர் இரவு, தன் இறந்த தந்தைக்கு ஈமச் சடங்குகள் செய்து கொண்டிருக்கும் போது அந்த ஈமச் சடங்கின் கடமைகளைக் கூட விட்டு விட்டு கடும் மழையையும் காற்றையும் பொருட்படுத்தாமல் சிந்தாமணியின் வீட்டுக்குச் சென்றார். வழியிலே பெரும் மழையினால் பெருக்கெடுத்து ஓடிய ஆற்றை, ஒரு மிதக்கும் பிணத்தைத் தெப்பமாகக் கொண்டு கடந்தார்! நடு இரவில் சிந்தாமணியின் வீடு பூட்டியிருந்ததால் வீட்டின் பின் வழியாகச் சென்று ஒரு பாம்பைக் கயிறென்று எண்ணிப் பிடித்து ஏறி பின்னர் கீழே விழுந்தார்!

அவர் கீழே விழுந்த சப்தம் கேட்டு சிந்தாமணி விழித்து, பில்வ மங்களாவை வீட்டுக்குள்ளே அழைத்துச் சென்றாள். சிந்தாமணி விலைமாதாக இருந்தாலும், சிறிது சிறிதாக அவளுக்குக்

கிருஷ்ணரிடம் பக்தி அதிகரித்து இப்போது ஒரு முழு பக்தையாக ஆகியிருந்தாள். எனவே அவள் பில்வ மங்கள தாக்கூராவின் அவல நிலையைக் கண்டு அவரை மறுத்தலித்தாள். அவள், 'என் உடல் மீது வைத்திருக்கும் ஆசையில் கொஞ்சமாவது கிருஷ்ணர் மேல் வைத்திருந்தால் எவ்வளவு பெரிய மகான் ஆகியிருப்பீர்' என்று கடிந்து கூறினாள்.

இதைக் கேட்ட பில்வ மங்கள தாக்கூராவின் மனதில் அது சுருக்கென்று தைத்தது! தான் செய்திருப்பது எவ்வளவு பெரிய கேவலமான, அற்பமான செயல் என்பதை உணர்ந்து அக்கணமே எல்லாவற்றையும் துறந்தார்.

அப்போதே அவர் இதயத்தில், கிருஷ்ண பகவானைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை பொங்கியது. வீட்டையெல்லாம் துறந்து துறவியாக மாறி பிருந்தாவனத்தை நோக்கி நடந்தார். சில நாட்கள் கால்நடையாக நடந்த பின் ஒரு கிணற்றில் தண்ணீர் பருகச் செல்ல, அங்கே ஒரு அழகான இளம்பெண் அவருக்குத் தாகம் தீர தண்ணீர் கொடுத்தாள். ஆனால் அவரோ தண்ணீர் பருகுவதை மறந்து, அந்த இளம்பெண்ணையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்! அவள் தன் வீட்டுக்குச் செல்லும் போதும், பில்வ மங்கள தாக்கூரா அவளையேப் பின் தொடர்ந்து சென்றார். வீட்டை அடைந்த போது, அவள் கணவன், "இந்த மகான் நம் வீட்டிற்கு ஏன் வந்திருக்கிறார்?" என்று நினைத்தான்.

பில்வ மங்கள தாக்கூரா அவள் கணவரிடம், "யார் இந்தப் பெண்?" என்று வினவினார்.
"அவள் எனது மனைவி" என்று அந்தப் பிராமணன் பதிலளித்தான்.
பில்வ மங்கள தாக்கூரா அந்தப் பிராமணனிடம், "அவளைக் கூப்பிடு, நான் கொஞ்சம் பேச வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

அந்தப் பிராமணன் தன் மனைவியை அழைத்தான். பில்வ மங்கள தாக்கூரா அவளிடம், "தயவு செய்து உன் இரண்டு கொண்டை ஊசிகளை எனக்குக் கொடுப்பாயா? என்று கேட்டார்.

"பாவம் இந்தத் துறவி! ஒருவேளை அவரது கால்களிலிருக்கும் முள்ளை எடுப்பதற்காகக் கேட்கிறார் போலும் என்று அந்த இளம் பெண்ணும் அவளது கணவனும் நினைத்தார்கள். அவள் தன் தலையிலிருந்த இரண்டு கொண்டை ஊசிகளை எடுத்து பில்வ மங்கள தாக்கூராகவிடம் கொடுத்தாள்.

பில்வ மங்கள தாக்கூரா உண்மையிலேயே ஒரு 'முள்ளை' எடுப்பதற்காகத் தான் ஊசிகளைக் கேட்டார். ஆனால் அது காலிலில்லை. அது அவரது இதயத்தில் இருந்தது! அவரால் அந்த முள்ளைத் தொட முடியவில்லை! எனவே அவர் அந்த இரண்டு கொண்டை ஊசிகளால் தனது இரண்டு கண்களையும் தானே குத்திக் குருடாக்கிக் கொண்டார்!

வட இந்தியாவில் ஒரு பழமொழி உண்டு, "மூங்கில் இல்லையென்றால், புல்லாங்குழல் ஏது?" இந்த உலகநாட்டத்தில் நம்மைக் கட்டிப்போட்டு அடிமையாக்குவதில் கண்கள் ஒரு மூல காரணம். ஆண்களுக்கு பெண்களைப் பார்க்கும் போதும், பெண்களுக்கு ஆண்களைப் பார்க்கும் போதும் மனதைக் கவர்ந்து ஆசைகளை உண்டாக்குவது இந்தக் கண்களின் மூலமே. இதனால் தான், ஸ்ரீமத் பாகவதமும் மற்ற சாஸ்திரங்களும் நம்மை இந்த மாயையிலிருந்து விடுபட வேண்டுமென்று மிகவும் எச்சரிக்கை செய்கின்றன.

முற்றிலும் குருடான பில்வ மங்கள தாக்கூரா, பிருந்தாவனத்தை நோக்கித் தன் பயணத்தைத் தொடர்ந்தார். அவருக்கு ஸ்ரீ கிருஷ்ணரிடம் அளவு கடந்த பக்தி உண்டானது. ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து பிரிந்து இருக்கிறோமே என்ற துயர் மேற்கொண்டது. கண்கள் சுத்தமாகத் தெரியவில்லையாதலால் வழியில் அளவில்லாத கஷ்டங்களையும் சந்தித்து, பாதைகளிலுள்ள எராளமான குழிகளில் விழுந்து எழுந்தும், ஆறுகளை மிகச் சிரமங்களுடன் தாண்டியும் பிருந்தாவனத்தை நோக்கி நடந்தார். மனதில் கடுமையானத் தீர்க்கத்துடன் பிருந்தாவனத்தை அடையும் ஒரே குறிக்கோளில் ஸ்ரீ கிருஷ்ணரை மட்டும் மனதில் நினைத்துக் கொண்டு வெகு நாட்களாக நடந்து கொண்டே இருந்தார்.

அப்போது ஒரு நாள் ஒரு சிறுவன், அவரிடம் நெருங்கி, "ஐயா, நீங்கள் எங்கு போய்க் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டான். பில்வ மங்களா மனமகிழ்ந்து, "மகனே, நான் பிருந்தாவனத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். நீ எங்கே போகிறாய்?" என்று கேட்டார்.

"நானும் பிருந்தாவனத்துக்குத் தான் போய்க் கொண்டிருக்கிறேன். நான் அங்கு தான் வசிக்கிறேன்" என்றான் அந்த சிறுவன்.

"ஓ, பிருந்தாவனத்துக்கா? அப்படியென்றால் நீவிர் என்னுடன் வாரும், இந்த நடைக் கம்பைப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்று கூறி அவனைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டான்.

அவர்கள் இருவரும் வெகுதூரம் நடந்து கடைசியில் பிருந்தாவனத்தை அடைந்தனர். ஆனால் வழியில் இருவருக்கிடையில் என்ன நடந்தது? பில்வ மங்களாவின் இதயத்தில் ஆன்மீக உணர்வு பெருக்கெடுத்து சொல்லமுடியாத அளவுக்கு பக்தி ரசம் பொங்கிக் கொப்பளித்தது. ஸ்ரீ கிருஷ்ணரின் பற்பல அற்புத லீலைகளின் காட்சிகள் அவருக்குக் கிடைத்தன. அந்த அமிர்தத்தில் மூழ்கித் திளைத்தார். ஏனென்றால், அந்தச் சிறுவன் வேறு யாருமல்ல. சாக்சாத் ஸ்ரீ கிருஷ்ணரே தான்! தானாக வந்து பில்வ மங்கள தாக்கூராவை பிருந்தாவனத்துக்கு அழைத்துச் சென்றார்!

## 2.3. *பக்தனை ஸ்ரீகிருஷ்ணர் தாமாகவே கவனிக்கிறார்*

இனி, ஒரு பக்தன் தன்னை முழுவதுமாக ஸ்ரீகிருஷ்ணரிடம் அர்ப்பணித்த பின், அந்த பக்தனை அவர் எவ்வாறு தானே நேரடியாகக் கண்காணிக்கிறார் என்பதைப் பார்ப்போம்.

பகவத் கீதை மற்றும் ஸ்ரீமத் பாகவதம் போன்ற அரிய சாஸ்திரங்களையும் அவற்றின் பல வியாக்கியானங்களையும் நன்குக் கற்றறிந்த பிராமணர் ஒருவர் முன்பு வாழ்ந்து வந்தார். அவர் தனது சிறு பருவத்திலிருந்தே வேறு எந்த வேலைகளையும் நாடாமல், சாஸ்திர ஞானங்களிலும் பகவான் சேவைகளிலும் மட்டுமே கவனம் செலுத்தி தன் வாழ்க்கையை நடத்தி வந்தார். ஒவ்வொரு நாளும் சாயங்கால வேளைக்குச் சிறிது முன்னால் வெளியே போய் ஒரு மணி நேரம் பிற வீடுகளில் பிச்சை எடுப்பார். கிடைத்ததை அப்படியேக் கொண்டு வந்து தன் மனைவியிடம் கொடுப்பார். அவரது மனைவி தன் கணவன் கொடுத்ததை  வைத்து சமைத்துக் கொடுப்பாள். அந்தப் பிராமணர் மற்ற நேரங்களில் சாஸ்திரங்களைப் படித்தும், பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் நாமங்களை உச்சரித்தும், அவரது அற்புத லீலைகளையும், மகிமைகளையும் மனதில் தியானித்தும் தன் வாழ்க்கையைக் கழித்து வந்தார்.

அந்தப் பிராமணருக்கும் அவரது மனைவிக்கும் பொருள் ஈட்டலில் கொஞ்சம் கூட நாட்டமில்லை. இருவரும், கிடைத்ததை வைத்துத் திருப்தியடைந்து, பகவான் என்ன கொடுத்தாரோ அதைக் கொண்டு சந்தோஷமாக வாழ்ந்தனர். இருவரும் பகவத் கீதையைப் படித்தும், அதன் அர்த்தங்களை விவரித்தும், ஆன்மீகம் சம்பந்தமான விஷயங்களில் விவாதங்கள் செய்தும் மகிழ்ந்து வாழ்ந்து வந்தனர். அந்த பிராமணர் கீதையிலுள்ள பற்பல ஆன்மீக உண்மைகளை அறிந்து அவற்றை அவ்வப்போது உபதேசம் செய்வதற்காகவும், பிரசுரம் செய்வதற்காகவும் எழுதி வைப்பது வழக்கம்.

ஒரு நாள் அவர் பகவத்கீதையின் சுலோகங்களைப் படித்து ஆராய்ந்து கொண்டிருந்தார். அதில் வரும் சுலோகம் 9.22 இல், "உண்மையான பக்தன் ஒருவன் ஸ்ரீகிருஷ்ணரை மட்டும் தியானித்தும், எல்லா வழிகளிலும் அவரையே வழிபட்டு (குறிப்பாக அவரது நாமங்களை உச்சரித்தும், லீலைகளையும் குணங்களையும் கேட்டும்) தன் ஷேமங்களையும் சந்தோஷத்தையும் சிறிதும் கூட பாராமல், ஸ்ரீகிருஷ்ணரை மகிழ்விப்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டால், அவன் கிருஷ்ணரின் பக்கத்திலேயே இருப்பான். மிகவும் கீழ் நிலையிலுள்ள ஒருவன் இதைச் செய்தாலும் அவனைக் கிருஷ்ணர் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வார். ஆனால் முழுமையான பக்தி இல்லையென்றால், அவன் எவ்வளவு

உயர்ந்தவனாக இருந்தாலும் கிருஷ்ணர் தன்னைக் காட்டாமல் மறைந்தே இருப்பார்." இந்த 9.22ஆம் சுலோகம் வெறும் சாதாரண பக்தி சாதனத்தைப் பற்றியதே. உத்தம பக்தியைப் பற்றி உள்ளதல்ல. "இவ்வாறு கிருஷ்ணரிடம் முழுமையாக சரணடைந்தவர்களை அவர் பாதுகாத்தும், வேண்டியவைகளைக் கொடுத்தும் பராமரித்துக் கொள்கிறார்" என்று அந்த சுலோகம் கூறுகிறது.

அந்தப் பிராமணர் இயற்கையாகவே மிகவும் அடக்கமானவராகவும் கிருஷ்ணரிடம் சரணடைந்தவருமாக இருந்ததால் இந்த சுலோகத்தைப் படிக்கும் போது அவரது இதயத்தில் பக்தி உணர்ச்சி பொங்கியது. ஆனால் அவர் அந்த சுலோகத்தின் கடைசி வரியில் நின்றார். "யோக ஷேமம் வஹாமி அஹம்". "எனது பக்தன் இவ்வாறு என் மேல் பக்தியுடன் இருந்தால், அவனுக்கு வேண்டிய எல்லாவற்றையும் நானே நேரில் கொடுக்கிறேன். சில சமயம் நானே அவைகளைச் சேகரித்து, சுமந்து வந்தும் (வஹாமி) கொடுக்கிறேன்" என்று அது பொருள் கொடுக்கிறது.

இதைப் படித்ததும், அந்தப் பிராமணர் அதற்கு மேல் படிக்க முடியாமல் நிறுத்தி விட்டார். "இது எப்படி சாத்தியமாகும்? எனக்கும் என் மனைவிக்கும் இப்போது எழுபதுக்கும் மேல் வயது ஆகிறது. இது வரையிலும் பகவான் எங்களை இவ்வாறு கவனித்ததே இல்லை. நாங்கள் பகவானிடம் முழுவதுமாக எங்களை அர்ப்பணித்துச் சேவை செய்கிறோம். இருந்தாலும் இந்த வீட்டில் ஒரு சிறு எலி கூட கிடையாது! ஏனென்றால் இங்கு உண்ணுவதற்கு எந்த உணவும் கிடையாது. இன்றைக்கோ உண்ண எதுவும் இல்லை; மழை நீரைப் பிடித்து வைக்க ஒரு மண்பாண்டம் கூடக் கிடையாது. வெளியே பிச்சையாக யார் என்ன கொடுத்தாலும் அதை மட்டுமே உண்கிறோம். இதையெல்லாம் பகவான் பார்க்காமலா இருக்கிறார்? அவர் ஒவ்வொரு ஜீவனின் உள்ளும் இருந்து எல்லாம் அறிபவர் அல்லவா? இந்த சுலோகத்தில் அவர் சொல்வது போல் அவர் நிச்சயமாக எங்களைப் பராமரிக்கவேயில்லை. ஒருவேளை நமக்கு ஏதாவது தேவையிருந்தால் அவர் மற்றவர்கள் மூலமாக ஏதாவது அனுசரணை செய்து வைப்பாரே தவிர, அவராக எதற்குத் தன் தலைமேல் எங்கள் பாரத்தை போட்டுச் சுமக்கப் போகிறார்? எனவே இந்த சுலோகத்தின் இந்த வரியை என்னால் அங்கீகரிக்க முடியாது. இந்த வரி கண்டிப்பாக பகவான் ஸ்ரீகிருஷ்ணரால் சொல்லப்பட்டதாயிருக்காது! யாரோ இதை இடையில் திணித்து எழுதியிருக்கிறார்கள்" என நினைத்துக் கொண்டு அந்த வரியை சிவப்பு மையினால் அடித்து விட்டார்!

அன்று அவர் வெளியே பிச்சை எடுக்கச் செல்வதற்கு, உடுக்க சரியான துணியின்றி, அவரது மனைவி அணிந்திருந்த துணியிலிருந்து சிறிதைக் கிழித்து அதையே கட்டியிருந்தார். அவர் வெளியே செல்லும் போதும் அந்த சுலோகத்தை அவரால் மறக்க இயலவில்லை. "நமக்குத் தேவையானவற்றை கிருஷ்ணர் தன் உடலால் சுமந்து கொண்டு கொடுப்பதா? ஒருவேளை அவர் ஏதாவது

செல்வந்தரையோ, அரசனையோ தூண்டி உதவி செய்ய வைக்கலாம். ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக இருக்கும் வலிமை நிறைந்த பகவான் எப்படித் தன் தலையில் சுமந்து கொண்டு கொடுக்க முடியும்? முன்பு, சுதாமா (குசேலர்) என்ற பிராமணத் தோழனை கிருஷ்ணர் அளவில்லாத செல்வங்களைக் கொடுத்து அரசன் போல் ஆக்கியதைக் கேட்டிருக்கிறேன். ஆனால் கிருஷ்ணரே நேரில் இதைக் கொண்டு வந்து கொடுக்கவில்லையே!" என்று எண்ணினார்.

ஒருவாறாக இந்தச் சிந்தனையை அகலவிட்டு, தன் பிச்சை யெடுப்பில் கவனம் செலுத்தினார். அன்று அவருக்கு யாருமே பிச்சை போடவில்லை. அங்கும் இங்குமாக அலைந்தும் ஒன்றுமே கிடைக்கவில்லை. ஒரு வீட்டில் இருந்தவர், "ஐயா, மன்னிக்க வேண்டும். எங்கள் வீட்டில் இறப்பு சம்பவித்ததால் மூன்று நாட்களுக்குப் பிச்சை அளிக்க முடியாது" என்று கூறினார். அவர் சென்ற இடம் எல்லாம் இப்படியும் அப்படியுமாகக் காரணங்கள் கூறி யாரும் பிச்சையே போடவில்லை. வெறும் கையுடனும் கனத்த இதயத்துடனும் அவர் வீட்டை நோக்கி நடந்தார்.

ஆனால் அவர் வெளியே பிச்சைக்காக அலைந்து கொண்டிருந்த அதே சமயம் ஒரு அழகான இளம் வயதான பையன் அவர்களுடைய வீட்டின் முன்னால் வந்து நின்றான். அவன் உடலோ கார் மேக நிறம். ஒரு மஞ்சள் நிறத் துணியை அவன் உடுத்திருந்தான். தன் தோள்களில் ஒரு நீளக் கம்பை வைத்து அதன் இரண்டு பக்கங்களிலும் தொங்கும் பைகளில் நிறைய உணவு தானிய பொருட்களைச் சுமந்தவாறு நின்று கொண்டிருந்தான். ஒரு பையில் அரிசி, பருப்பு, நெய் மற்றும் மசாலா வகைகள் இருந்தன. மற்றொரு பையில் சர்க்கரை, காய்கறிகள் மற்றும் பல வகையான உணவுப் பொருட்கள் இருந்தன. அந்தப் பெரிய சுமைகளைத் தூக்கி வரும் அளவுக்கு அந்தச் சிறுவனுக்கு வலிமை இருந்ததாகத் தெரியவில்லை. அவன் மிக இளம் பருவமாகக் காணப்பட்டான் - ஒருவேளை பதினான்கு வயது இருக்கலாம். அவனது அவயங்கள் அனைத்தும் மிகவும் மிருதுவாக இருந்தன. உடல் முழுவதும் வியர்வையுடன் கதவின் முன்னின்று கூவினான், "அம்மா! என் குருவின் மனைவியே, தயவு செய்து கதவைத் திறங்கள்".

பிராமணரின் மனைவி வீட்டிற்குள்ளிருந்து பதிலுக்குக் கேட்டாள், "யார் நீ? நீ என்ன சொல்கிறாய்? என் கணவனுக்கு எந்தச் சீடனுமே கிடையாது, யார் நீ?"

அந்தப் பையன், "அம்மா, நான் உங்கள் கணவருடைய சீடன்" என்று பதில் அளித்தான். பதிலைக் கேட்ட அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. "இது யார்? எங்கிருந்து இவன் வருகிறான்?" என நினைத்தாள். அவளால் கதவைத் திறக்க இயலாத நிலை. ஏனென்றால் அவளது உடலை மறைக்கும் அளவுக்கு ஆடையில்லை.

அச்சிறுவன் உடனே இதை அறிந்து அவள் அணிவதற்காக கதவின் ஓரம் வழியாக தனது மேலாடையை உள்ளேக் கொடுத்து அதன் பின்னர் உள்ளே வந்து கூறினான், "அம்மா, என் குரு என்னை இங்கு அனுப்பி வைத்தார். இன்று நாங்கள் இவை எல்லாவற்றையும் சேகரித்தோம். அவர் என்னிடம் இதை இங்கேக் கொண்டு சேர்க்கச் சொன்னார். அவர் பின்னால் மெதுவாக வருவதாகவும் கூறினார். நான் அவரிடம், "எனக்கு மிகவும் தாகமாக உள்ளது; நான் சிறிது தண்ணீர் அருந்தி என் தாகத்தைத் தணித்து விட்டு அதன் பின் செல்கிறேன்" என்று கூறியதற்கு அவர், "இல்லை இல்லை, நீ பின்னர் தண்ணீர் குடித்துக் கொள். இதை நீ முதலில் என் வீட்டிற்குக் கொண்டு செல்" என்று அவசரமாக அனுப்பினார். "இந்தப் பெரும் சுமையை சிறுவனான நான் சுமக்க முடியாது என்று தெரிந்தும் கூட, அவர் எல்லாச் சுமைகளையும் என் மேல் திணித்து இங்கே அனுப்பினார் அம்மா!" என்று கூறினான்.

பிராமணரின் மனைவி இதைக் கேட்டதும் மனம் இளகி அழ ஆரம்பித்தாள். "இந்தப் பச்சிளம் குழந்தை எவ்வளவு கஷ்டப் பட்டிருக்கிறான். இவ்வளவு வியர்த்து இதைத் தூக்கிக் கொண்டு வரச் சொன்ன என் கணவருக்குக் கொஞ்சம் கூட இரக்கமில்லை. எல்லாவற்றையும் இந்தப் பச்சிளம் குழந்தையின் தலையில் ஏற்றிச் சுமக்க விட்டு விட்டு அவர் மட்டும் வெறுங்கையுடன் வருவார்! அவருக்குச் சிறிதளவாவது ஈவு இரக்கமிருந்தால் இப்படிச் செய்வாரா?" என்று அங்கலாய்த்தாள்.

மேலும், அந்தச் சிறுவன் தன் முகத்தின் ஒரு பக்கத்தைக் காட்டி, "அம்மா, இங்கே பாரம்மா. அவர் எனது முகத்தில் நகத்தால் கீறிவிட்டார்!" (பகவத் கீதை ஸ்ரீ கிருஷ்ணரின் முகம் என்பது சாஸ்திரம்)

சிறுவனின் முகத்தில் சிவப்பாக இரத்தம் கசிவதைப் பார்த்ததும் அவள் துடித்தே போனாள். "ஐயோ, இரத்தம் வருகிறதே" என்று அந்தச் சிறுவனை தன் மடியில் எடுத்து வைத்துக் கொண்டு, தன் கணவரிடமுள்ள கோபத்தில், "என் மகனே! இன்று அவர் வரட்டும். நான் அவரைச் சும்மா விட மாட்டேன். அவர் தன்னை ஒரு அடக்கமான பக்தன் என்று கூறிக் கொள்கிறார். ஆனால் இந்தப் பச்சிளம் குழந்தையிடம் அவருக்குக் கொஞ்சம் கூட இரக்கம் காட்டத் தெரியவில்லையே" என்று தன் கணவர் மேல் கோபம் கொண்டாள்.

பின்னர் அந்தச் சிறுவனை உள்ளே அழைத்துச் சென்று, "நீ இங்கே இரு. நான் சீக்கிரமாக இதைச் சமைத்து உனக்குச் சாப்பாடு கொடுக்கிறேன். நீ சாப்பிடாமல் இங்கிருந்து போகக் கூடாது" என்று கூறி அந்தச் சிறுவனை அமர்த்தி விட்டு, சமையல் செய்ய அடுக்களைக்குள் சென்றாள்.

அவள் அடுக்களையில் அரிசி, பருப்பு, காய்கறிகளைக் கொண்டு

சமையல் செய்து கொண்டிருக்கும் போது, இன்னொரு கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது.

"கதவைத் திற" என்று அவளது கணவர் வெளியிலிருந்து கூறினார்.

தன் கணவன் தான் என்று தெரிந்ததும், கோபத்துடன் போய்க் கதவைத் திறந்து, அவர் உள்ளே காலை வைக்கும் முன்பாகவே, "வந்து விட்டீரா! வெறும் கையுடன் வந்து விட்டீரா? எல்லாவற்றையும் அந்தப் பச்சிளம் குழந்தையின் தலையில் கட்டிச் சுமக்க விட்டு விட்டு போதாததற்கு அவனது முகத்தையும் வேறு கீறி விட்டு விட்டு வந்திருக்கிறீர்! உமக்குக் கொஞ்சமாவது ஈவு இரக்கம் உள்ளதா?" என்று பொரிந்து தள்ளினாள்.

அதற்கு அந்த பிராமணர், "நீ என்ன சொல்கிறாய்? நீ பேசுவது எனக்கு எதுவுமே புரியவில்லையே" என்று பரிதாபமாக தன் மனைவியைப் பார்த்தார்.

"உங்களுக்கு எதுவுமே தெரியாதா? நன்றாகவே தெரியும். நீங்கள் சேகரித்த எல்லாவற்றையும் அந்தப் பையனின் தலைமேல் ஏற்றித் தாகத்திற்குத் தண்ணீர் கூட குடிக்க விடாமல் இங்கே அனுப்பி வைத்ததைத் தான் சொல்கிறேன்" என்றாள்.

"யாரை நீ சொல்கிறாய்? எனக்கு எதுவுமே தெரியாது" என்றார் பிராமணர்.

"பாவம் அந்தச் சிறு குழந்தையின் மேல் எல்லாப் பாரத்தையும் ஏற்றி இங்கே அனுப்பி விட்டு விட்டு நீர் மட்டும் வெறுங்கையுடன் வந்திருக்கிறீரே, இது நியாயமா? அதுவும் போதாது என்று அந்தக் குழந்தையின் முகத்தில் வேறு கீறி விட்டிருக்கிறீர்" என மனைவி கேட்டாள்.

ஒன்றுமே புரியாத பிராமணர், "அப்படியென்றால் அவன் எங்கேயிருக்கிறான்" என்று கேட்டார்.

"வீட்டுக்குள்ளே வந்து நீங்களே பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்!" என்று கூறியபடி, தன் கணவனை உள்ளேக் கூட்டிச் சென்றாள். இருவரும் வீட்டின் உட்பக்கத்தில் சென்று பார்த்தனர். ஆனால் அங்கே அந்தச் சிறுவன் இல்லை! மாயமாக மறைந்து போய் விட்டான்!

அவர்கள் வீடு முழுவதும் தேடிப் பார்த்து விட்டனர். சிறுவனை எங்குமே காணோம். ஆனால் அவன் உட்கார்ந்திருந்த இடத்தில் மட்டும் மஞ்சள் துணியில் உள்ள நூல்கள் கிடந்தன. வெகு நேரமாகத் திரும்பத் திரும்பத் தேடிப் பார்த்தும் சிறுவனைக் காணவேயில்லை!

சற்று நேரம் கழித்து அந்த பிராமணர் அவரது பகவத் கீதைத் திறந்திருப்பதைப் பார்த்தார். அவர் சிவப்பு மையினால் அடித்திருந்த வரி இப்போது எந்த விதமான மையுமின்றி முன்பு போலவே இருந்தது! அந்தப் பிராமணர் திடுக்கிட்டார். நடந்ததை அவரால் நம்பவே முடியவில்லை. அவருக்கு இப்போது எல்லாம் புரிந்து விட்டது. கண்கள் குளமாகி கண்ணீர் விட்டு அழுதார். அவர் அழுது கொண்டே கூறினார், "பார்த்தாயா நீ? இன்று பகவான் நமது சுமையினை எப்படித் தன் மேல் சுமந்தார் என்பதை நாம் நேரிலேயே பார்த்து விட்டோம்! இன்று நடந்தது இதை எவ்வளவு தெளிவாகக் காட்டுகிறது பார். எனது சந்தேகம் இப்போது அறவே விலகி விட்டது!"

*****

அர்ஜுனன் கிருஷ்ணரிடம், "பிரபோ, இது போர்க்களம். இங்கு என்னால் "மன் மனா பவ" - வை அனுசரிக்க இயலாது, மற்றும் உங்களுடைய முழு பக்தனாகவும் ("மத் பக்தா") ஆக இயலாது. இதை விட எளிதாகவும் நேரடியாகவும் உள்ள முறையிருந்தால் தயவு செய்து அதை எனக்கு உபதேசியும்" என்கிறான்.

அடுத்து, கிருஷ்ணர், "மத் யாஜி" - "என்னை வழிபடு" என்பதைப் பற்றி விளக்குகிறார்.

# அத்தியாயம் - 3

## 3.1. *என்னை வழிபடு, எனக்கு வந்தனம் செய்*

"நீ எனக்கு மிகவும் பிரியமானவனாதலால் உனக்கு நான் பரம இரகசியமான மறைந்து நிற்கும் உண்மைகளை இப்போது கூறுகிறேன். இதை நீ என்னிடமிருந்து கேட்பது மிகவும் உபயோகமாயிருக்கும். நீ என்னை எப்போதும் நினைத்திரு, என் பக்தனாகு, என்னை வழிபடு, எனக்கு வந்தனம் செய். நீ கண்டிப்பாக என்னிடம் வந்து சேருவாய். நான் இதை உனக்கு சத்தியம் செய்கிறேன், ஏனென்றால் நீ எனக்குப் பிரியமானவன்." (பகவத் கீதை 18.64, 18.65)

இந்த சுலோகத்தில் வரும் "பரமம்" என்ற வார்த்தைக்கு "எல்லா சாஸ்திரங்களிலும் உள்ள உன்னதமான சாரம்" என்று பொருள். ஒருவன் தனது மனம், உடல், வாக்கு அனைத்தையும் குருவின் தாமரைப் பாதங்களில் அர்ப்பணிக்கவில்லையானால், ஸ்ரீகிருஷ்ணர் இப்படியான உள் இரகசியங்களைக் கூறமாட்டார். நாம் குருவிடம் எப்படிச் சரணடைய வேண்டும்? அதையும் பகவான் கீதையில் கூறுகிறார். "நீ இந்த இரகசியமான ஆன்மீக அறிவை, குருவிடம் உன்னை சமர்ப்பித்து, அவருக்குப் பணிவிடைகள் செய்து திருப்தி செய்து, முறையுடன் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். குரு எல்லா உண்மைகளையும் உணர்ந்தவராதலால் அவரால் இதை உனக்கு உபதேசிக்க முடியும்" (பகவத் கீதை 4.34).

முதலில் ஒருவன் குருவிடம் அணுகி அவரிடமிருந்து அறிந்து கொள்வதற்குத் தன்னைத் தகுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். குருவை அணுகுவதற்கு மூன்று வழிகள் உள்ளன.

1. ப்ரணிபதேனா : தன்னை சமர்ப்பித்தல்
2. பரிபிரஸ்னேனா : முறையோடு கேட்டுத் தெரிதல்
3. சேவயா : அடக்கத்துடன் சேவை செய்தல்

குருவிடம் அடக்கமின்றி, விடை கிடைப்பதற்காக மட்டும் கேள்விகள் கேட்பவனுக்கும், கேட்ட வினாவையேத் திரும்பத் திரும்பக் கேட்பவனுக்கும், அவர் மேலெழுந்தவாரியாக, சாதாரண ஜனங்களுக்கு அளிக்கும் பதிலை மட்டுமே கொடுப்பார். "சர்வ-குக்யதம்" என்று கூறப்படும் மிக ஆழ்ந்து மறைந்து நிற்கும் உண்மைகளை அவர்களுக்குக் கூற மாட்டார். மேலும், ஸ்ரீகிருஷ்ண பகவானே இந்த விஷயத்தில் சத்தியம் கொடுத்துள்ளார், "எவரொருவர் சிரத்த விரதமின்றியோ, களங்கமான மனதுடனோ,

குருவிடன் சரணடையாமலோ, குருவுக்கும் கிருஷ்ண பக்தர்களுக்கும் சேவை செய்யாமலோ, கீதையைப் படித்தால் அவர்கள் அதன் 'உண்மையான' அறிவைப் புரிந்து கொள்ளவே மாட்டார்கள்."

முதலில் கிருஷ்ண பகவான் அர்ஜுனனிடம் மிகவும் மேலெழுந்த வாரியாக கர்ம யோகத்தைப் போதிக்கிறார். "நீ உன் செயலையெல்லாம் பகவானுக்கு அர்ப்பணமாகச் செய்து விடு. இல்லாவிட்டால் அது உன்னை உலக பந்தத்தில் ஆழ்த்தி விடும்" என்று. (பகவத் கீதை 3.9)

அடுத்து அவர் பிரம்ம ஞானத்தை உபதேசிக்கிறார். அதன் பின் பரமாத்மாவைப் பற்றியுள்ள ஞானத்தை உபதேசிக்கிறார். "உன் இதயத்தில் பெருவிரல் அளவில் சூட்சுமமாக வீற்றிருக்கும் விஷ்ணுவைத் தியானம் செய்; இந்த யோகம், கர்மமாகச் செய்யும் செயல்களையும், விஞ்ஞான அறிவையும், விரதங்களையும் விடவும் சிறந்தது. எவனொருவன் பரமாத்மாவிடம் சரணடைந்து யோகத்தால் முழுவதுமாக ஐக்கியமாகி, அவரை மட்டுமே முழு நம்பிக்கையுடன் வழிபடுவானோ, அவன் எல்லா யோகிகளை விடவும் உயர்ந்தவன்." (பகவத்கீதை 6.47)

குறிப்பாக, இதுவரையிலும் ஸ்ரீகிருஷ்ணர் அவரது விஸ்வ ரூபத்தைக் காட்டவில்லை. ஒவ்வொருவரின் இதயங்களிலும் சூட்சுமமாக வீற்றிருக்கும் அவரது பரமாத்ம சொரூபத்தைத் தான் வழிபடக் கூறினார். பின்னால் கீதையின் கடைசி அத்தியாயத்தில் நாம் இப்போது விவரித்துக் கொண்டிருக்கும் "மன் மனா பவ..." (கீதை 18.65) என்ற ஸ்லோகத்தைக் கூறுகிறார். மேலும் இந்த இடத்தில் அவர் குறிப்பாக எந்த சொரூபத்தைப் பற்றிக் கூறுகிறார் என்பதை நாம் நன்றாகச் சிந்தித்து அறிய வேண்டும். கொள்ளை அழகுள்ள கார்மேக மேனியை உடையவனும், பேரழகு பொழியும் கேசங்களைக் கொண்டவனும், மயிலிறகைத் தன் தலையில் சூடிக் கொண்டிருப்பவனும், சுய ரூபமான அந்த சியாம சுந்தரனைத் தான் கூறுகிறார்! தனது திருவுருவத்தை மூன்று இடங்களில் வளைத்து, பிருந்தாவனத்தில் ஓர் கடம்ப மரத்தின் கீழே நின்று கொண்டு, வேங்குழலைத் தன் கொவ்வைப் பழம் போன்ற அழகான வாயில் நயமுடன் பிடித்துக் கொண்டு, அனைத்து இதயங்களையும் பூரிப்பின் சிகரத்துக்குக் கொண்டு செல்லும் தேனினும் இனிய அமிர்த கானத்தைப் பொழிந்து கொண்டிருக்கும், ஆம் அவரது அந்த சியாம சுந்தர ரூபத்தைத்தான் அவர் கூறுகிறார்! நாம் எப்போதும் இந்த கிருஷ்ண ரூபத்தைத் தான் நினைக்க வேண்டும். இந்த சுலோகம் வரும் வரை அவர் இந்த இரகசியத்தைக் கூறவேயில்லை என்பதை நீங்கள் முக்கியமாகத் தெரிந்திருக்க வேண்டும்!

முன்பு, கோபியர்கள் எப்படித் தங்கள் மனங்களை முழுமையாக கிருஷ்ணரிடம் கொடுத்திருந்தார்கள் என்பதைப் பார்த்தோம். மேலும், கிருஷ்ண பக்தர்கள் எவ்வாறு அவரது நாமங்கள், குணங்கள்

மற்றும் லீலைகளைப் பற்றிக் கேட்பதிலும், ஜெபிப்பதிலும், மனதில் அவரை நிலை நிறுத்தி தியானிப்பதிலுமாக ஆன்மீக ஈடுபாட்டில் தங்களை முழுவதுமாக அர்ப்பணித்தார்கள் என்பதைப் பற்றியும் பார்த்தோம். மேலும், இதை விடவும் உயர்ந்த பக்தர்கள் எவ்வாறு தங்களை முழுவதுமாக கிருஷ்ண சேவையில் அர்ப்பணிக்கிறார்கள் என்பதைப் பற்றியும் பார்த்தோம்.

சில சயமங்களில் தற்செயலாக ஏற்படும் ஆன்மீகப் பூரிப்பில் நம் மனம் ஸ்ரீகிருஷ்ணரிடம் மூழ்கும். ஆனால் நிரந்தரமாக நம் மனதைக் கொடுக்க இயலாமலிருக்கும். பூரண பக்தி நிலைக்கு வந்த பின்னர் மட்டுமே நம்மால் எப்போதும் கிருஷ்ணரைப் பற்றி நினைக்க முடியும். இந்தப் பக்தி ரச நிலைக்கு வருவது மிக மிக அரிது. இதற்கும் கூட மேலான பிரேமை என்ற நிலை ஒன்று உள்ளது. அதைப் பற்றிக் கூற வேண்டிய அவசியமேயில்லை! (மானிட உடம்பால் அப்படிப்பட்ட மேலான பிரேம நிலைகளைத் தாங்க முடியாது. அவைகளைத் தாங்க வேறு ஆன்மீக சொரூபமான உடல் தேவை. அது பூலோகத்தில் கிடைக்காது).

ஒருவன் பக்தனாக (மத் பக்தோ) ஆவதற்கு முதலில் நம்பிக்கைத் தேவை. அதன் பின்னர் கட்டுப்பாடுடன் வேண்டிய சாதனங்களைச் செய்ய வேண்டும். அப்போது ஆன்மீக ருசி வந்து சேரும்; அதாவது அவன் ஆன்மீக காரியங்களில் மிகவும் இன்பம் காண்பான். அதன் பின்னர் முழுமையான முதிர்ந்த பற்று உண்டாகி, பூரணமான பக்தி உண்டாகிறது. இந்நிலையை ஒருவன் அடைந்து விட்டால் அவன் கிருஷ்ண பக்தனாகி விட்டான் என்று சொல்லி விடலாம். இந்த நிலை வந்தால் மட்டுமே அவன் ஸ்ரீகிருஷ்ணரை எப்போதும் நினைக்க ஆரம்பிப்பான்.

அடுத்து ஸ்ரீகிருஷ்ணர் என்ன சொல்கிறார்? "மத் யாஜி" என்கிறார். "யாஜி" என்றால் "யக்ஞம்", "படைத்தல்" அல்லது "தியாகம்" என்று அர்த்தம். ஒருவனுக்கு மேற் சொன்னது போல் கிருஷ்ண பக்தி இன்னும் வரவில்லை என்றால், அதே சமயம் அவனுக்கு கொஞ்சமேனும் நம்பிக்கை இருந்தால் அவனை "யக்ஞம்" அதாவது படைப்புகளுடன் வழிபாடு செய்யச் சொல்கிறார். யக்ஞம் செய்வது உலக சம்பந்தம் என்ற பிணைப்பிலிருந்து விடுபட ஒரு நல்ல மருந்து. இது சம்பந்தமாக ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுக்கும், ராமானந்த ராயருக்கும் இடையே நடந்த உரையாடலின் சில வரிகள் இங்கு குறிப்பிடத்தக்கவை. "கிருஷ்ண வழிபாட்டில் பதினாறு வகையான பதார்த்தங்களோ, அல்லது பன்னிரெண்டு வகைகளோ, அல்லது வெறும் ஐந்து வகைகளோ கொண்டு வழிபடலாம். ஆனால் அந்த வழிபாட்டில் உண்மையான பக்தியில்லையானால் பகவான் அதில் திருப்தி கொள்ள மாட்டார்".

உணவிலும் தண்ணீரிலும் நமக்கு எவ்வளவு விருப்பம் உள்ளதென்பது நமக்கு எந்த அளவுக்குப் பசி அல்லது தாகம் இருக்கிறது என்பதைப் பொறுத்தது. நமக்குப் பசி கொஞ்சமும்

இல்லாத போது ஒருவர் நம்மிடம் மிக நன்றாக சமைத்த பதார்த்தத்தைச் சாப்பிடக் கொடுத்தாலும், "ஓ, நீ என்ன செய்தாய்" என்று சிறிது ருசி பார்த்து, "இதில் உப்பு சரியாக இல்லை." , அல்லது, "இதில் உப்பு கூடியிருக்கிறது" என்று ஏதாவது கூறுவோம். மேலும் இந்தச் சப்பாத்தி சரியான வட்டமாக இல்லை என்றோ, ரசகுல்லா சப்பையாக உள்ளது என்றோ, பாயாசம் தண்ணீர் போல் உள்ளது என்றோ ஏதாவது ஒரு குறையைக் கூறுவோம்!

ஆனால் நாம் கடுமையான பசியில் இருக்கும் போது பழைய உலர்ந்த சப்பாத்தியென்றாலும் கூட, அதில் கொஞ்சம் நீரைத் தெளித்து, ஒரு எலுமிச்சம் பழத்தை அதன் மேல் பிழிந்து விட்டுச் சாப்பிட்டாலும் கூட அது மிகவும் ருசியாகத் தெரியும்! எனவே, நாம் பசியுடன் இருந்தால் எந்த உணவுமே ருசியாகத் தெரியும். இதே மாதிரி தான், நாம் பக்தியின்றி எதைப் பகவானுக்குப் படைத்தாலும் அவருக்குப் பசி எடுப்பதில்லை. அவ்வாறு படைத்த எந்தப் பதார்த்தங்களிலும் அவருக்குத் திருப்தி இருக்காது. ஆனால் ஒரு "பிரேம" பக்தன் அவற்றைப் படைத்தால் பகவானுக்கு உடனே பசி எங்கிருந்தோ வந்து விடுகிறது! படைத்தது பதினாறு பதார்த்தங்களோ, அல்லது வெறும் ஒரே ஒரு பதார்த்தமோ, அவர் அதை மிகவும் விருப்பமாகப் புசித்து பரம திருப்தி அடைகிறார். பகவத் கீதையில் (9.26) பகவான், "ஒருவன் எனக்கு 'பக்தியுடன்' ஒரு இலையையோ, பூவையோ, பழத்தையோ, தண்ணீரையோ அளித்தால் நான் அதை ஏற்றுக் கொள்வேன்" என்று கூறுகிறார்.

ஒரு பக்தனுக்கு ஸ்ரீகிருஷ்ணரைப் பசிக்க வைக்கும், இந்த விதமான "பிரேம" பக்தி இருக்க வேண்டும். மிக முக்கியமாக நாம் புரிந்து கொள்ள வேண்டிய கருத்து இது. மாறாக, "பகவானின் ஆனந்தத்திற்காக நாம் ஏன் இதைப் படைக்க வேண்டும். முடிவில் அது நமது சந்தோஷத்திற்காகத் தானே" என்று ஒருபோதும் நினைக்கக் கூடாது. ஸ்ரீமத் பாகவதத்தில் (1.26) இந்த ஒரு சுலோகம் வருகிறது: "பகவானுக்குப் பக்தி செலுத்துவது (அதோக்ஸஜா) மட்டுமே மனித சம்பிரதாயத்தின் மிக உன்னதமான தர்மம். அது எந்த வித சுய பலனையும் எதிர்பாராமல் இடைவிடாமல் இருக்க வேண்டும். அப்படிச் செய்யும் போது அது அந்த ஜீவாத்மாவையும் முழுவதுமாகத் திருப்திப் படுத்தும்".

இந்த சுலோகம் ஸ்ரீகிருஷ்ண பகவானை திருப்திப் படுத்தி சந்தோஷமாக வைப்பதைக் குறிப்பிடுகிறது. அவரை, அந்த மூலப் பொருளை, திருப்திப்படுத்தினால் நமது வழிபாடு வெற்றிகரமாகிறது. ஆனால் நாம் நமது சந்தோஷத்திற்காக எந்த ஒரு செயலையும் செய்தோமானால் அது நம் உள்ளிருந்த காமத்தின் (ஆசைகளின்) காரணமாகவேச் செய்ததாக ஆகி விடுகிறது.

இங்கே நாம் ஒரு முக்கியமான கருத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் பகவானைத் திருப்திப்படுத்தினால், அது தானாக நம்மையும் திருப்திப்படுத்துகிறது. ஆனால் நம் திருப்திக்காகவோ,

சொந்த ஆனந்தத்திற்காகவோ வழிபாடு செய்தோமானால் அது பக்தியே அல்ல. ஏனென்றால் அவை சுய நலனுக்காக மட்டும் செய்யப் பட்டவை. இதை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

சுயநலனையும், சுய மகிழ்ச்சியையும் குறிக்கோளாகக் கொண்ட எந்த விதமான வழிபாடும் அசுத்த வழிபாடேயாகும். அப்படிப்பட்ட மதங்களே நிறைய உள்ளன. பெரும் பாலான வீடுகளில் வழிபாடு செய்யும் போது, "பிரபோ, நான் எனது எல்லா செயல்களின் பலன்களையும் உன் காலடியில் சமர்ப்பிக்கிறேன்" என்று வழிபடுவார்கள். ஆனால் உண்மையிலேயே இதன் உள் அர்த்தம் என்ன? " நானும் என் குடும்பமும் அமைதியாகவும் மகிழ்ச்சியுடனும் இருக்க வேண்டும்" என்ற வேண்டுதலை உள்ளடக்கியதே அது. இவ்வாறு நாம் ஒருபோதும் வழிபடக் கூடாது.

## 3.2. *பக்தனின் வாக்கைக் காப்பாற்றுகிறார்*

இப்போது, சுய அனுபவத்தில் நானே கண்ட உண்மைச் சம்பவம் ஒன்றைக் கூறுகிறேன். நாம் எவ்வாறு பகவானிடம் அன்புடன் ஒட்டியிருக்க வேண்டும் என்பதை இது விளக்குகிறது. மதுராவில் (வட இந்தியா) ஸ்ரீகிருஷ்ணரின் சாலக்கிரம் சிலையை வழிபட்டு வந்த ஒரு பக்தர் இருந்தார்.

அவருக்கு விக்கிரக வழிபாட்டு முறைகளும் மந்திரங்களும் சரியாகத் தெரியாது. இருந்தாலும் அவர் தினமும் பூஜை வழிபாட்டை மிகவும் சிரத்தையுடன் செய்து வந்தார். அவர் தினமும் காலை நான்கு மணிக்கு யமுனை நதியில் குளித்து விட்டு, யமுனை நதி தீர்த்தத்தையும் பூஜைக்காக வீட்டுக்குக் கொண்டு வந்து, அதையே திலகம் இடவும் உபயோகிப்பார். யமுனை தீர்த்தத்தைத் தவிர வேறு எந்த நீரையும் அவர் உபயோகிக்க மாட்டார்.

இந்த வழிபாட்டு உறுதியை அவர் பத்து அல்லது பதினைந்து வருடங்கள் தவறாமல் கடைப் பிடித்து, பூஜையை மிக நம்பிக்கையுடன் செய்து வந்தார். ஒரு நாள் மஹா மாதத்தில் அமாவாசை அன்று கடும் புயலும் மழையுமாக இரவு காரிருளாக இருந்தது. மேலும் யமுனா நதி பெருக்கெடுத்து, "விஸ்ராம ஹாட்டா" என்ற குளிக்கும் இடத்திலும் பெருகி, மிகவும் உக்கிரமாக தண்ணீர் சீறிப் பாய்ந்தது. அன்று அவருக்கு நேரம் சரியாகத் தெரியாமல், காலை மூன்று மணிக்கே யமுனாவில் குளிக்க வந்து விட்டார்! குளித்த பின்னர் புயல் காற்றும் மழையும் வந்ததால் அவர் குளிரால் நடுங்கினார். அந்த நாட்களில் கடிகாரம் எல்லோரிடமும் கிடையாது. துருவ நட்சத்திரத்தையும், சுக்ர நட்சத்திரத்தையும் வைத்து நேரத்தைக் கணிப்பார்கள். ஆனால் அன்று மழை மேகங்கள் அடர்ந்து இருந்ததால் நட்சத்திரங்களைப் பார்க்கவே முடியவில்லை.

கடுமையான குளிரும் மழையும் இருட்டுமாக இருந்ததால் வீட்டுக்கு வரும் பாதையை அவர் தவற விட்டு விட்டார். மிகுந்த இருட்டில் எதுவுமேத் தெரியாமல், "நான் என் வழிபாட்டு உறுதியை இன்று எப்படிக் காப்பாற்றுவேன்?" என்று அங்கலாய்த்துத் தத்தளித்தார். அப்போது ஒரு சிறுவன் அங்கே வருவதைப் பார்த்தார். அவன், மழையிலிருந்து பாதுகாக்க இரண்டாக மடித்த நீளப் பையைத் தன் தலையின் மேல் போட்டுக் கொண்டு, கையில் ஓர் லாந்தர் விளக்கையும் பிடித்துக் கொண்டு அவர் பக்கம் வந்தான்.

"ஐயா, நீங்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்?" என்று அந்தச் சிறுவன் கேட்டான்.

பதிலாக அந்த பக்தர், தான் வசிக்கும் தெருவின் பெயரையும் வீட்டு

எண்ணையும் கூறினார். உடனே அந்தச் சிறுவன், "ஓ, எனக்கு அந்த இடம் நன்றாகவேத் தெரியும். நானும் அந்தப் பக்கம் தான் போகிறேன். என்னுடன் வாருங்கள், நான் கொண்டு விட்டு விடுகிறேன்" என்றான்.

அந்தச் சிறுவனின் மேல் முழு நம்பிக்கை வைத்து இருவருமாக நடந்து வந்து கொண்டிருந்தனர். வழியில் அந்தச் சிறுவன் ஒன்றுமே பேசவில்லை. அவர் தன் மனத்தினுள் நினைத்துக் கொண்டார், "இந்த இருட்டில், யாருமே இல்லாத இந்த நேரத்தில் இந்தச் சிறுவன் எப்படி ஏன் இங்கு வந்தான்?" என்று.

இருவரும் குளிரில் நடந்து, குறிப்பிட்டத் தெருவில் வீடு வந்ததும் சிறுவன் அவரிடம் திரும்பி, "ஐயா, இதோ உங்கள் வீடு அங்கே உள்ளது. நான் இன்னும் போக வேண்டும்" என்று கூறி அந்தச் சிறுவன் மேலே நடந்து சென்றான்.

அந்த பக்தன் தனது வீட்டை நோக்கித் திரும்பி அடியெடுத்து வைக்க ஆரம்பித்த பின்னர் தான் அவருக்குச் சந்தேகம் எழுந்தது. உடனேத் திரும்பி லாந்தருடன் சென்று கொண்டிருந்த சிறுவனின் திசையில் பார்த்தார். என்னே ஆச்சரியம்! அந்தச் சிறுவனையும் காணவில்லை, அந்த லாந்தர் வெளிச்சத்தையும் காணவில்லை! அவருக்கு இப்போது தான் விஷயம் முழுவதுமாகப் புரிந்தது! உடம்பில் புல்லரித்தது. தலையில் அடித்துக் கொண்டு ஏங்கி ஏங்கி அழ ஆரம்பித்தார். "என் உறுதிவாக்கைக் காப்பாற்ற வேண்டி பகவானே இந்த உருவத்தில் விளக்கையும் கொண்டு வந்து எனக்கு வழி காட்டியிருக்கிறார்!" என்று நெஞ்சம் நெகிழ்ந்தார்.

வழிபாட்டின் சரியான உதாரணம் இது தான். நமது சௌகரியத்தையும், சந்தோஷத்தையும், கவலைகளையும் பார்க்காமல் உறுதியான தீர்மானத்துடன் வழிபாடு செய்தால் அவர் நாம் படைப்பவைகளை ஏன் ஏற்றுக் கொள்ள மாட்டார்? அது அவருக்கு உண்மையிலேயே பசியை உண்டாக்கும். இதைத் தான் பகவத் கீதையில் (9.26) அவர், எந்த ஒரு எளிய பொருளென்றாலும் பக்தியுடன் அளித்தால் அதை ஏற்றுக் கொள்ளுவேன் என்கிறார்.

இதே மாதிரி நாம் குருதேவரிடமும் இருக்க வேண்டும். சில சமயங்களில் நாம் சேவை செய்யும் போது நம் குருதேவர் நம்மைக் கடிந்துரைப்பார். இதை நாம் பெரிய மலைபோல் பெரிதுபடுத்தி, "என் குருதேவர் என்னிடம் முன்பு மிக அன்புடன் இருப்பார். இப்போது அவர் என்னிடம் அப்படியில்லை. எனவே நான் இங்கிருந்து விலகிப் போகிறேன்" என்று நினைப்பது மிகவும் தவறு. நாம் குருதேவருக்குச் சேவை செய்யும் போது நிறைய சிரமங்கள் நம்மைச் சோதனை செய்வதற்காகவே வரும். ஆனால் நம் மனம் எப்படியிருக்க வேண்டும்? "நான் எத்தனைப் பிறவிகள் எடுத்தாலும் என் குருதேவரையும் பகவானையும் விடவே மாட்டேன்" என்று உறுதியாக, வைராக்கியத்துடன் இருக்க வேண்டும்.

## 3.3. *எனக்கு வந்தனம் செய்*

அர்ஜுனன் மேலும் கேட்டான்: "பிரபோ, என்னால் இந்தப் போர்க்களத்தில் இப்படிப்பட்ட வழிபாடுகள் எதையுமேச் செய்ய முடியாது. எனவே இதை விடவும் சுலபமான இன்னொரு வழியைத் தயவு செய்து சொல்ல வேண்டும்."

அதற்குக் ஸ்ரீகிருஷ்ண பகவான், "உனக்கு இதை விடவும் எளிதான வழி வேண்டுமா? அப்படியென்றால் நீ, "மாம் நமஸ்குரு" - எனக்கு வெறும் வந்தனமாவது செய்" என்று பதிலளித்தார். இதன் பொருள், வெறுமனே நாவளவிலோ அல்லது மனதில் கர்வத்துடனோ வந்தனம் செய்வது அல்ல. "எல்லா விதமான மதங்களையும் விட்டுவிட்டு நீ என்னிடம் முழுவதுமாக சரணடைவாயாக" (பகவத் கீதை 18.66) என்று கூறுகிறார்.

இந்த உபதேசத்தை ஒருவன் மிகவும் நன்றாகப் புரிந்து கொண்டு, தகுந்த மனப்பாங்குடன் வந்தனம் செய்ய வேண்டும். அவ்வாறு ஒருவன் கிருஷ்ண பகவானுக்கு வந்தனம் செய்வது, அவன் உலக, மற்றும் பிறவி சாகரத்தினின்று வெளியே குதிப்பது போன்றதாகும். "ஒருவன் பத்து அஸ்வ மேத யாகங்கள் செய்தாலும் அவன் திரும்பவும் பிறப்பது நிச்சயம். ஆனால் ஒருவன் ஸ்ரீ கிருஷ்ணருக்கு இப்படி ஒரே ஒரு முறை வந்தனம் செய்தால் அவனுக்கு இனி பிறவித் துன்பமேயில்லை!"

ஒருவன் தன்னை முழுவதுமாக ஸ்ரீகிருஷ்ணரிடம் ஒரே ஒரு முறை சரணடைந்து வந்தனம் செய்தாலே போதும், அவன் பிறப்பு இறப்பு சூழல் சக்கரத்தினின்று விடுபட்டு விடுகிறான்! அவன் இன்னொரு தாயின் வயிற்றில் இனிப் பிறவி எடுக்கவே மாட்டான். இது தான் "மாம் நமஸ்குரு" என்பதன் அர்த்தம், "எனக்கு நீ வந்தனம் செய்." கிருஷ்ணர் இப்படி உபதேசித்த உடனே அர்ஜுனன், "பிரபோ, நான் உம்மை ஒரு முறையல்ல, நூற்றுக் கணக்கான முறை வந்தனம் செய்கிறேன்!" என்றான்.

இது வரையில் நாம் பார்த்த பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் உபதேசங்கள் யாவை?

"மன் மனா பவ" - நீ உன் மனதை முழுவதுமாக என்னிடம் மட்டுமே கொடு.

"மத் பக்தோ" - நீ என் பக்தனாகு,

"மத் யாஜி" - நீ என்னை வழிபடு,

"மாம் நமஸ்குரு" - நீ எனக்கு வந்தனம் செய்.

இனி இந்த நான்கையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்ப்போம். "மனதில் முழு நம்பிக்கையுடனும் பக்தியுடனும், அன்பு உள்ளத்தால் பக்தியின்

எல்லா அங்கங்களையும் நேர்மையாகக் கடைப் பிடித்தும் எனக்கு நீ வந்தனம் செய்." இதுவே "சர்வ - ஹுக்யதா" என்று சொல்லப்படும் மிகவும் உயர்ந்த ரகசியங்கள் அடங்கிய பொக்கிஷமாகும். எவனொருவன் இந்த சுலோகத்தை (18.65) முழு ஆர்வத்துடனும் சிரத்தையுடனும் பின்பற்றுகிறானோ, அவன் இந்தப் பிறவி சாகரத்தை எளிதில் கடந்து, ஸ்ரீகிருஷ்ணரின் தாமரைப் பாதங்களின் மேல் பிரேம பக்தி உண்டாவது மிக நிச்சயம்!

சுருக்கமாகக் கூறப்போனால், இந்த சுலோகம் (18.65) மிகவும் உயர்ந்த பிருந்தாவன "ப்ரஜ" பக்தி, அல்லது பிரேம பக்தியை எவ்வாறு அடைவது என்பதைக் குறிப்பிடுகிறது. இந்த ஒரே ஒரு சுலோகமே ஸ்ரீமத் பகவத்கீதையின் சாரம்! அடுத்து வரும் 18.66 ஆம் சுலோகம் இரண்டாம் தரமே.

இந்தப் பிரேம பக்தி தேவதைகளுக்குக் கூடக் கிடையாது என்பதை நாம் குறிப்பாக அறிந்து கொள்ள வேண்டும். கிருஷ்ண பிரேம பக்தி அவ்வளவு மகத்தானது! இந்தப் பிரேம பக்தியினால், ஸ்ரீகிருஷ்ணர் எல்லாக் கடவுள்களுக்கும் மேலான பரம இறைவன் என்ற எண்ணமும் கூட மிக நெருங்கிய அன்பினால் அமிழ்ந்து போய் விடுகிறது! இதனால் தான் கோபியர்கள் கிருஷ்ணரை, "ஏ கள்வா" என்றும், "ஏ பக்கிரி" என்றும் அழைக்கும் போது, அவருக்கு மிகவும் இனிமையாக இருக்கிறது. அனைத்து வேத கானங்களும் அவரைப் புகழ்ந்து பாடுவதில் உண்டாகும் திருப்தியை விடவும் இந்த ஏளன வார்த்தைகள் ஸ்ரீகிருஷ்ணருக்குத் தேனாக இனிக்கின்றன!

சுய நலங்களையும், பயபக்தி, மற்றும் ஏதோ சொர்க்கத்துக்குப் போய் ஆனந்தமாக இருக்க வேண்டும் என்ற அற்ப ஆசைகளைக் குறிக்கோளாக கொண்ட எந்த மதமும் இங்கே கிருஷ்ண பக்தியின் முன்பு ஒரு அற்பமான தூசியாகி மறைந்து விடுகிறது.

ஸ்ரீமத் பகவத்கீதை ஒரு ஆரம்பப் புத்தகமே. இதற்கு மேலாக ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீசைதன்ய சரித்தாம்ருதா, ஸ்ரீபிரம்ம சம்ஹிதா இப்படி எத்தனை எத்தனையோ கிருஷ்ண பக்தியை வழங்கும் பொக்கிஷங்கள் உள்ளன. அவற்றை ஒருவன் தகுந்த குருவிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டும்.

ஸ்ரீமத் பகவத்கீதை ஒரு ஆரம்பப் புத்தகம் என்றாலும் அதற்கு மதிப்புக் கொடுப்பதை சிறிதளவு கூடக் குறைக்கக் கூடாது. கீதை நமக்குக் கொடுக்கும் அஸ்திவாரத்தில் தான் நாம் பக்தி என்ற பிரம்மாண்டமான மாளிகையைக் கட்டி, அதில் ஸ்ரீராதா கிருஷ்ணரை இருத்தி பரவசம் பொங்க பக்தி ரசத்துடன் பூஜை செய்ய முடியும்.

இப்போது பகவத் கீதையின் சாரம் என்ன என்பதை நீங்கள் புரிந்து கொண்டீர்கள்!

# முடிவுரை

பரிசுத்தமான கிருஷ்ண பக்தி, மிகப் பெரிய தெய்வங்களுக்கும் கூடக் கிடைப்பதில்லை என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்த உலகத்தில் எத்தனை எத்தனையோ மதங்கள் உள்ளன. மேலும் புதுப்புது மதங்கள் முளைத்துக் கொண்டும் வருகின்றன. ஆனால் ஸ்ரீகிருஷ்ண வழிபாட்டுக்கு முதலும் முடிவும் கிடையாது. அது நிரந்தரமானது. உதாரணமாக வேதங்களுக்கு முதலும் முடிவும் கிடையாது. அவை எப்போதும் ஆன்மீக ஆகாஷத்தில் சப்த பிரம்மமாக எப்போதும் இருப்பவை. சுமார் 5,000 வருடங்களுக்கு முன்னால் ஸ்ரீகிருஷ்ணர் நமக்குப் போதித்த ஸ்ரீமத் பகவத்கீதையில் அதே பகவத்கீதையை அவர் சூரிய பகவானான விவஸ்வனுக்குக் கோடிக்கணக்கான வருடங்களுக்கு முன்னால் தானே நேரடியாகப் போதித்ததாகக் கூறுகிறார். நமக்குக் கிடைத்திருக்கும் பிரம்ம சம்கிதம் அளவற்ற பிரம்மாண்டங்களில் ஒன்றான நமது பிரம்மாண்டத்தின் படைக்கும் கடவுளான பிரம்மாவினால் சுமார் 804,160,000,000,000,000 வருடங்களுக்கு முன்னால் ஸ்ரீராதா கிருஷ்ணரையும் அவரது கோலோகத்தைப் பற்றியும் இயற்றிய பாடலே. அவர் இயற்றிய 100 அத்தியாயங்களில் ஒரே ஒரு அத்தியாயம் (அத்தியாயம் 5) மட்டுமே நமக்கு ஸ்ரீசைதன்ய மகாபிரபு மூலமாகக் கிடைத்துள்ளது.

ஆரம்பமும் முடிவுமில்லாத ஸ்ரீராதா கிருஷ்ணா வழிபாடு நிரந்தரமானது. புதிதாக வந்ததல்ல. ஆனால் எந்த ஒரு மதத்துக்கு முதல் உண்டோ அதற்கு நிச்சயமாக முடிவும் உண்டு. இதை நாம் சரித்திரத்திலேயேக் காண்கிறோம். இந்தப் புதுப்புது மதங்கள் ஒரு குறிப்பிட்ட சிறு காரணத்துக்காக உண்டாக்கப் படுகின்றன. பின்னர் காலப்போக்கில் மறைந்து விடுகின்றன. உதாரணமாக நாம் காணும் அய்யாவழி, உலகத்தில் ஒரு கோடியில் வாழும் நாடார் ஜாதி அநியாயமாக நசுக்கப்பட்டதால், நம் பிரம்மாண்டத்தின் காக்கும் கடவுளான திருமால் (ஸ்ரீவிஷ்ணு), ஒரு ஜீவனில் அவரது சக்தியைக் கொடுத்து சக்தியவேஷமாக வந்து அவர்களைக் காப்பாற்றினார். இது போல் தான் கிறிஸ்தவ, முகம்மதிய, மற்றும் சித்தர்கள் அவ்வப்போது உண்டு பண்ணும் அனத்து மதங்களும். இவை அனத்துக்கும் சக்தியவேஷ அவதாரமே அடிப்படையாக இருக்கும். இவ்வாறு தோன்றிய மதங்கள் அனத்துக்கும் தொடங்கிய காலம் உண்டு.

சுத்தமான ஸ்ரீராதா கிருஷ்ணா வழிபாட்டைத் தவிர வேறு எந்த மதங்களுமே சுத்தமான கிருஷ்ண பக்தியைக் (ராக அல்லது பிரேம பக்தியை) கொடுக்க இயலாது என்று ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப் பட்டுள்ளது. அவற்றை ஏமாற்றும் மதங்கள் என்று அது குறிப்பிடுகிறது. ஏனென்றால் அவை அனைத்தும் சுயநலத்தை

அடிப்படையாகக் கொண்டவை. அவைகள் சொர்க்கத்தைக் கொடுக்கலாம், இந்திரலோகப் பதவியைக் கொடுக்கலாம், பிரம்மாவின் பதவியைக் கொடுக்கலாம், மோட்சத்தைக் கொடுக்கலாம் அல்லது வைகுந்தத்தைக் கொடுக்கலாம். ஆனால் எல்லாவற்றுக்கும் மேலான கிருஷ்ண பிரேம பக்தியை ஒருபோதும் அவைகளால் கொடுக்க முடியாது. ஸ்ரீகிருஷ்ணரின் மேல் உண்டாகும் பிரேம பக்தியின் முன் இவை எல்லாமே அற்பமானவை.

தர்மா சாரி மத்யே பகுத்தா கர்ம நிஷ்டா
கோடி கர்ம நிஷ்ட மத்யே, ஏக ஞானி ஸ்ரேஸ்தா
கோடி ஞானி மத்யே, ஹய ஏக ஜன முக்தா
கோடி முக்த மத்யே, துர்லப ஏக கிருஷ்ண பக்தா

“தர்ம மதங்களைப் பின்பற்றி கருமம் செய்பவர்களில், உண்மையான கர்ம யோகியை விரல் விட்டு எண்ணி விடலாம். அப்படி ஒரு கோடி கர்ம யோகிகளில், ஒருவனே ஞான யோகியாக ஆகிறான். அப்படி ஒரு கோடி ஞான யோகிகளில், ஒருவனே உண்மையில் முக்தி அடைகிறான். அப்படி ஒரு கோடி முக்தர்களில், ஒரு உண்மையான கிருஷ்ண பக்தனைக் காண்பது மிக அபூர்வம்.”

ஸ்ரீபகவத் கீதையின் சாரமே ஸ்ரீராதா கிருஷ்ண பக்தியின் ஆரம்பம்! ஸ்ரீகிருஷ்ண பக்தியைப் பெறுவதற்கு ஒருவன் அளவற்ற புண்ணியம் செய்திருக்க வேண்டும்! மிகவும் உத்தமமான, முதலோ முடிவோ இல்லாத சர்வ சனாதன பக்தி மார்க்கமே ஸ்ரீராதா கிருஷ்ண பக்தி மார்க்கம். இது மதமல்ல. நிரந்தர ஜீவ தர்மம். இதில் ஜாதி, மதம், நிறம், மொழி என்ற எந்தவித பேதமும் கிடையாது. ஆனால் ஒரு சுத்தமான கிருஷ்ண பக்தனை நாடி, அவரிடமிருந்து கேட்டறிந்தே நாம் ஸ்ரீகிருஷ்ண பக்தியைப் பெற முடியும். வேறு எந்த வகையிலும் அதைப் பெற முடியாது. ஸ்ரீராதா கிருஷ்ணரே ஸ்ரீசைதன்ய மகாபிரபுவாக அவதரித்து மகத்தான அதே ஸ்ரீராதாகிருஷ்ண பக்தியை இவ்வுலகத்துக்கு அளிக்க வந்தார். அவர் காட்டிய அரும்பெரும் வழியை நாம் பின்பற்றுவோம்!

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

இந்த மகாமந்திரத்தில் வரும் 'ஹரே' என்றால் 'ராதே' என்று பொருள். ‘கிருஷ்ணா’ என்றால், அனத்து ஜீவன்களையும் கவர்ந்து இழுக்கும் ஸ்ரீ நந்த நந்தன் ஸ்ரீகிருஷ்ணரைக் குறிக்கும். 'ராமா' என்றால், பரம ஆனந்தத்தை அளிக்கும் 'ரமண்' என்ற ஸ்ரீராதா ரமணரையேக் குறிக்கும்.

ஜாதி, மதம், நிறம், மொழி எல்லாவற்றையும் மறந்து, ஸ்ரீராதா கிருஷ்ண வழிபாட்டை நல்குங்கள்! கிடைத்ததற்கரிதான இந்த

மானிட ஜன்மத்தில், ஸ்ரீராதா கிருஷ்ண வழிபாட்டினால், உத்தமமான மறு உலகத்தில் நிரந்தரமாக வாழ வழி செய்யுங்கள்!

நன்றி, வணக்கம்.

# வினாக்கள்

**குறிப்பு**: சில வினாக்களுக்கு பல விடைகள் (Multiple Ticks) இருக்கும்

**1. பகவத் கீதையில் எத்தனை சுலோகங்கள் உள்ளன?**
1) 550
2) 700
3) 108
4) 1008

**2. பகவத் கீதை எவைகளின் சாரம்?**
1) வேதங்களின் சாரம்
2) புராணங்களின் சாரம்
3) ஸ்மிருதி சாஸ்திரங்களின் சாரம்
4) உபநிஷத்துக்களின் சாரம்

**3. பகவத் கீதை யாரை பரம இறைவன் என்று கூறுகிறது?**
1) சிவ பெருமானை
2) கணபதியை
3) ஸ்ரீகிருஷ்ணரை
4) துர்கா தேவியை

**4. பிரம்ம சம்கிதம் யாரை பரம இறைவன் என்று கூறுகிறது?**
1) சிவ பெருமானை
2) கணபதியை
3) ஸ்ரீகிருஷ்ணரை
4) துர்கா தேவியை

**5. சரியான விடையை (விடைகளை) கூறவும்**
1) பிரம்மத்திலிருந்து பகவான் வருகிறார்
2) பிரம்மம் பகவானின் தேஜஸ் (வெளிச்சம்)
3) பிரம்மம் பகவானுக்கு மேலானது
4) கிருஷ்ண பக்தர்கள் பிரம்மத்தின் ஐக்கியமாக விரும்புவார்கள்

**6. சரியான விடையை (விடைகளை) கூறவும்**
1) எவரை வணங்கினாலும் அவை ஸ்ரீகிருஷ்ணரையே அடைகின்றன
2) தேவரை வணங்குபவர்களும் ஸ்ரீகிருஷ்ணரையே அடைவார்கள்
3) தேவர்களை வணங்குபவர்கள் தேவர்களை மட்டுமே அடைவார்கள்
4) தேவர்களுக்கும் ஸ்ரீகிருஷ்ணருக்கும் வித்தியாசம் கிடையாது

**7. தேவர்களை ஒருவன் வணங்க காரணம் என்ன?**
1) தேவர்கள் கிருஷ்ண லோகத்தை கொடுப்பார்கள்
2) தன் ஜடவுலக ஆசைகளை திருப்தி செய்ய
3) எவரை வணங்கினாலும் பிரம்மத்திற்குத் தானே போகிறார்கள்
4) அவனது புத்தி இன்னமும் உண்மையான பக்திக்கு வரவில்லை

**8. ஸ்ரீமத் பாகவதத்தின் எத்தனை காண்டங்கள் உள்ளன?**
1) 18 காண்டங்கள்
2) 12 காண்டங்கள்
3) 108 காண்டங்கள்
4) 101 காண்டங்கள்

**9. கீதையின் சாரமான இரண்டு சுலோகங்கள் என்ன?**
1) மன் மனா பவ மத் பக்தோ
2) சர்வ தர்மான் பரித்யஜ்ய
3) அஹம் சர்வஸ்ய பிரபாவோ
4) பரித்ராணாய சாதுநாம்

**10. மன் மனா பவ - இதன் அர்த்தம் என்ன?**
1) உன் மனதையும் இதயத்தையும் கிருஷ்ணரிடம் மட்டுமே வை
2) உன் மனதை ஏதாவது தெய்வங்களிடம் வை
3) உன் மனதை செய்ய வேண்டிய கர்மங்களில் வை
4) உன் மனதை அடக்கி பிரம்மத்தில் தியானிக்க வேண்டும்

**11. ஆன்மீக பக்தி வழியில் முதல் படி என்ன?**
1) ரசிப்பு
2) பாவா
3) சிரத்தை
4) பிரம்மத்தில் தியானம்

**12. கிருஷ்ண பிரேம பக்தியில் மிகவும் உயர்ந்தவர்கள் யார்?**
1) யாதவர்கள்
2) பாண்டவர்கள்
3) வைகுந்த வாசிகள்
4) கோபியர்கள்

**13. துவாரகையில் ஸ்ரீகிருஷ்ணரின் முதன் மந்திரி யார்?**
1) உக்ரசேனர்
2) உத்தவர்
3) குசேலர்
4) தர்மர்

**14. அர்ஜுனனின் வில்லின் பெயர் என்ன?**
1) காண்டீபம்
2) பாஞ்ச சைன்யம்
3) உத்தர ரோபம்

**15. பாண்டவர்களின் சேனையில் எத்தனை பிரிவுகள் இருந்தன?**
1) 11
2) 18
3) 7
4) 9

**16. அர்ஜுனனின் தேர்க் கொடியில் யார் இருந்தார்?**
1) விஷ்ணு பகவான்
2) கருட பகவான்
3) அனுமான்
4) சுக்ரீவன்

**17. நம்மிடம் இருக்கும் 6 எதிரிகளில், 3 எதிரிகள் எவை?**
1) நாவடக்கம், தூக்கம், ஆராவாரம்
2) பெருந்தீனி, கோபம், அமைதியின்மை
3) நாவடக்கமின்மை, பெருந்தீனி, சிற்றின்ப ஆசை
4) கோபம், பெருந்தீனி, தூக்கம்

**18. பகவத் கீதை எதில் ஆரம்பித்து எதில் முடிகிறது?**
1) சரணாகதியில் ஆரம்பித்து போரில் முடிகிறது
2) போரில் ஆரம்பித்து சரணாகதியில் முடிகிறது
3) கோபத்தில் ஆரம்பித்து போரில் முடிகிறது
4) ஆசையில் ஆரம்பித்து நாம சங்கீர்த்தனத்தில் முடிகிறது

**19. கண்ணையே குத்திக் கொண்டு பின்னர் பக்தர் ஆனவர் யார்?**
1) உத்தவர்
2) பில்வ மங்கள தாக்கூரா
3) விஸ்வாமித்திரர்
4) அகத்தியர்

**20. "மத் யாஜி" என்றால் என்ன பொருள்?**
1) என்னிடம் சரணடை
2) என் பக்தனாகு
3) எனக்கு வந்தனம் செய்
4) என்னை வழிபடு

**21. "மத் பக்தோ" என்றால் என்ன பொருள்?**
1) என்னிடம் சரணடை
2) என் பக்தனாகு
3) எனக்கு வந்தனம் செய்
4) என்னை வழிபடு

**22. "மாம் நமஸ்குரு" என்றால் என்ன பொருள்?**
1) என்னிடம் சரணடை
2) என் பக்தனாகு
3) எனக்கு வந்தனம் செய்
4) என்னை வழிபடு

**23. பிரம்ம சம்கிதத்தை இயற்றியவர் யார்?**
1) வேத வியாசர்
2) பிரம்ம தேவர்
3) வால் மீகி